# நவமணி

25 – 05 - 08

LEAD

## கிழக்கில் இன மோதலுக்கு பாரிய சதி!

(நவமணி செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தை கிழக்கு மக்களே நிர்வகிக்க தனியான மாகாணசபை உருவாக்கப்பட்டு முதலமைச்சர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டு, அமைச்சர்கள் நியமனங்களும் பூர்த்தி செய்யப்பட்ட கையோடு தமிழ்—முஸ்லிம் ஒற்றுமையை குலைத்து இன மோதலை ஏற்படுத்த முயற்சி இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் அமைச்சரவையில் இடம்பெற எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் சம்மதித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவி பெற்று சத்தியப் பிரமாணம் செய்துமுடித்த சில மணி நேரங்களில் காத்தான்குடியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இயக்க ஆரயம்பதி தளபதி சாந்தன் என்பவரும் இன்னொருவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அதைத்தொடர்ந்து காத்தான்குடி செய்ன்மௌலானா தக்கியாப்பள்ளிவாசலுக்கு முன்னால் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டதில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், ஆறு முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தால் காத்தான்குடியிலும் அதை அடுத்துள்ள பிரதேசத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. முஸ்லிம்களும் தமிழர்களும் அச்சம் கொண்டனர். வாகனங்கள் பலவும் அடித்து நொருக்கப்பட்டன.

கிழக்கின் முதலமைச்சர் யார் என்ற கேள்விக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் பதில் கண்ட பின் ஹிஸ்புல்லாஹ் சம்பந்தப்பட்ட விவகாரமும் இணக்கப்பாட்டுக்கு வந்த பின் தமிழ்—முஸ்லிம் இன மோதலைத் தூண்டும் விதத்தில் தாக்குதலை நடத்தியவர் யார் என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

குறித்த தாக்குதல் திட்டமிட்ட ரீதியில் நடந்திருக்கிறதாகவே மக்கள் நம்புகின்றனர். இது ஒரு பாரிய சதியின் வெளிப்பாடே என்றும் பேசப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஊடகவியலாளர்களிடம் பின்வருமாறு கூறினார்:—

காத்தான்குடி பஸ்நிலையத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் பிராந்திய தலைவர் உட்பட இரண்டு உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். அதேபோன்று மூன்று முஸ்லிம்களும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். இதனைத்தொடர்ந்து அப்பிரதேசத்தில் பதற்ற நிலமை ஏற்பட்டது. உடனே நான் முதலமைச்சர் பிள்ளையானுடன் தொடர்பு கொண்டேன். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முப்படையினருடனும் தொடர்பு கொண்டேன். இவ்விடயம் தொடர்பாக மூன்று தடவைகள் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு உரையாடினேன். அவரும் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்.

நவமணி செய்தியாளர் அூ ரோசி பின்வருமாறு தகவல் தெரிவிக்கிறார்:—

ஆரையம்பதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சாந்தன் உட்பட இருவர் காத்தான்குடியில் வைத்து 22.05.08இல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இது பகல் 12.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது, சாந்தனும் அவருடன் கூடச்சென்ற இவ்விருவர் மீதும் காத்தான்குடிப் பிரதானவீதியிலுள்ள சில்லரைக்கடையொன்றுக்கு முன்பாக வைத்து இனம் தெரியாத நபரொருவர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளார். படுகாயமடைந்த இருவரும் இஸ்தலத்திலே கொல்லப்பட்டனர்.

சாந்தன் (38) அரசன் (27) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து ஆரயம்பதி பிரதேசத்தில் வைத்து மூன்று முஸ்லிம்கள் சுடப்பட்டனர். இவர்கள் படுகாயத்துடன் மட்டக்களப்பு போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டனர் பின்னர் அவர்கள் மரணமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து காத்தான்குடி, ஆரயம்பதி பிரதேசங்களில் பதற்றம் நிலவியது. பின்னர் அனைத்து வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள், அரச தனியார் காரியாலயங்கள் மூடப்பட்டதுடன் உள்ளூர் போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

நிலமையைக்கட்டுப்படுத்த பொலிசாரும் விசேட அதிரடிப்படையினரும் ஸ்தலத்திற்கு விரைந்து பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டனர்.

சாந்தன் மீதான இத்துப்பாக்கிச் சூட்டை தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திவிட்டு தப்பிச்சென்றிருக்கலாம் என காத்தன்குடிப்பொலிசார் தெரிவித்தனர்.

மண்முனைப்பற்று (ஆரயம்பதி) பிரதேசசபையின் தவிசாளர் கிறிஸ்டினாவின் கணவர் சாந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடியின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக பொலீசார் வியாழன் பிற்பகலில் ஊரடங்குச்சட்டத்தை உடனடியாக அமுலுக்கு வரும்விதத்தில் அறிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி ஓட்டமாவடியில் இருந்தபோது மு.கா.தலைவரும் கிழக்குமாகாண உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அறிந்தார். உடனே அவர் கொலைகளைக் கண்டித்தார். அத்துடன் முதலமைச்சர் பிள்ளையானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ‘‘நீங்கள்தான் இப்போது கிழக்குமாகாண முதலமைச்சர். கிழக்கின் நிர்வாகம் முழுவதற்கும் நீங்களே பொறுப்பு இந்நிலையில் சட்டத்தையும் ஒழுங்கையும், நீதிநியாயத்தையும் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை. உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்டுங்கள்’’ எனக் கூறினார்.

அது தவிர பொலிஸ்மா அதிபருடனும் தொடர்புகொண்டு நிலமையை விளக்கி பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

Editorial

## அரசு முஸ்லிம்களுக்கு புகட்டிய பாடம்

கிழக்கு மாகாண முதல்வர் நியமனத்தில் நீதி நியாயம், நேர்மைக்கு இடம்கொடுக்காமல் ஆயுதத்துக்குப் பணிந்து விட்டது அரசு. ஐக்கிய இலங்கை, ஜனநாயகம் ஆகியவற்றுக்காகப் பாடுபட்ட, உயிர்த்தியாகம் செய்த முஸ்லிம்களைப் புறக்கணித்து, ஆயுதத்தில் நம்பிக்கை வைத்து செயல்பட்ட ஒரு குழுவுக்கு முக்கியத்துவமளித்துள்ளது அரசு.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே மாகாணம் கிழக்குதான். கிழக்கு மாகாண நிர்வாகத்துக்குரிய சபையைத் தெரிவு செய்ய தேர்தல் நடத்தியபோது இந்த மாகாணத்தில் உங்கள் பிரதிநிதித்துவத்தை — செல்வாக்கை அதிகரித்துக் காட்டுங்கள். முதலமைச்சர் பதவியைத் தருவோம் என்றது அரச மேல் மட்டம்.

முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் பலரும் அரசின் இந்த சவாலை ஏற்று கிழக்கு மாகாணத்துக்குச் சென்று முகாமிட்டு தீவிரப் பிரசாரம் செய்தனர். முதலமைச்சர் பதவி கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையில், ஆசையில் முஸ்லிம்களும் ஆளுந்தரப்புக்கு வாக்களித்தனர். முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் கூட்டிக்காட்டினர். ஆனால் அரச மேல்மட்டமோ நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது.

உங்கள் பிரதிநிதித்துவம் கூடியது உண்மைதான். ஆனால் ஒரே அமைப்பிலிருந்து வந்த பிரதிநிதித்துவம் அல்ல அவை. பல்வேறு அமைப்புகளிலிருந்து வந்தவை என்று புதுத் தத்துவம் பேசினர் அரசின் உயர்மட்ட மேதாவிகள். எத்தனை அமைப்புகளிலிருந்து வந்தாலும் அனைத்தும் ஒரே கட்சிக்காக — ஒரே நோக்கத்துக்காகக் கிடைத்தவை என்ற உண்மையை மறந்தனர், மறைத்தனர். முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்க முற்பட்டனர்.

முஸ்லிம்களே ஒன்றுபட்டு ஹிஸ்புல்லாஹ்வை முதல்வராக்குங்கள் என்று முதலில் கூறியவர்கள், தேர்தல் முடிந்ததும் முஸ்லிம் என்று இனவாதம் பேசாதீர்கள். நாட்டு நலனை மதியுங்கள் என்று அறிவுரை கூறினர்.

பிள்ளையானிடம் ஆயுதம் இருக்கிறது. முன்னர் நாட்டைப் பிரிக்க ஆயுத முனையில் போராடிய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் அவர். பிரதிநிதித்துவம் கூடியதோ, இல்லையோ முதலமைச்சர் நியமனத்தில் அவரை ஒதுக்க முடியாது. அவரை கோபமூட்டவும் முடியாது. அவர் மீண்டும் காட்டுக்குள் பிரவேசித்து ஆயுதத்தைப் பாவிக்கத் தொடங்கினால் பிரச்சினை கூடிவிடும். எனவே அவரை தடவிக் கொடுத்து, அரவணைத்து, பதவி கொடுத்து, முடிசூட்டி மகிழ்விக்க வேண்டும். அதுதான் நாட்டுக்கு நல்லது என்று அரச தரப்பில் கூறப்பட்டதை கேட்டவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஓர் ஆயுதக்குழு முன் அரசு பணிந்து போவதா? நீதி நேர்மையை பறிகொடுப்பதா? அந்த ஆயுதக்குழுவை திருப்திபடுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறுவதா? இதுதானா அரச தர்மம் என்றெல்லாம் நல்லவர்கள், புத்திஜீவிகள் கேள்வி எழுப்பினர்.

கிழக்கு மாகாண தேர்தல் முடிந்த கையோடு அரசு முஸ்லிம்களுக்கு ஒரு பாடத்தைப் புகட்டியுள்ளது. அது கசப்பான பாடம். ஓர் அரசு கற்பிக்கக் கூடாத பாடம். ஆம், ஜனநாயகம் பற்றி பேசுங்கள். ஆனால் ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைக்காதீர்கள். நீங்களும் ஆயுதக் குழு ஒன்றை வைத்திருங்கள். உங்கள் உரிமை, இருப்பு, பாதுகாப்பு ஆகியவற்றுக்காக ஆயுத முனையில் போராடுங்கள். அப்போதுதான் நாம் உங்களை அங்கீகரிப்போம். உங்கள் நலன்களைப் பாதுகாப்போம். உரிமைகளைத் தருவோம். இதுதான் அரசு சொல்லாமல் சொல்லி புகட்டிய பாடம்.

அரசினால் ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்கள் இந்த பாடத்தை சிரமேற்கொண்டு ஆயுதத்தில் நம்பிக்கை வைக்கத் தொடங்கினால் அதற்குரிய முழுப் பொறுப்பையும் அரசுதான் ஏற்க வேண்டும்.

ஜனநாயகம் என்பது பொய். வன்முறைக்கான ஆயுத கலாசாரமே மெய் என முஸ்லிம் இளைஞர்கள் உறுதியாக நம்பினால் — நேர்மையான வழியிலிருந்து விலகி

செயல்படத் தொடங்கினால் — அதன் விளைவு எத்தகையதோ, அதற்கு முகம் கொடுக்க அரசு தயாரா? சந்தர்ப்பத்துக்கேற்ப எதையும் எப்படியும் பேசி அரசியல் நடத்தலாம் என்று ஆளுந்தரப்பு நம்பிச் செயல்பட்டால் இந்த நாட்டில் நீதி, நியாயம் இருக்காது, நேர்மை இருக்காது.

தலைவன் எப்படியோ அவனைப் பின்பற்றுபவர்களும் அப்படியே என்பார்கள். இந்த நாட்டை ஆளும் தலைவர் நீதி, நேர்மைக்கு சாவுமணியடித்து புதியதொரு முன்மாதிரியைக் காட்டினால் மக்களும் அந்த வழியில் செல்வார்கள் என்பதில் சந்தேகம் இருக்காது.

கிழக்கு மாகாணத் தேர்தலின் பின் அரசு முஸ்லிம்களுக்கு மாபெரும் அநீதி விளைவித்து விட்டது என்பதுதான் உண்மை.

## மனக்கசப்புகள், பிணக்குகள் ஜனநாயகத்திற்கு சவாலாக மாறலாம்

**- பிளேட்டே**

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக விழுமியங்களை நிலைநாட்டுவதற்கும் வட மாகாணத்திற்கு அரசியல் செய்தியொன்றை வழங்குவதற்குமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாண முதலமைச்சராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை நியமிக்காமல் பிள்ளையானை நியமித்ததாக அரசாங்க தரப்பினர் வாதிடுகிறார்கள்.

அரசாங்கம் நேர்மையாகவே இக்கருத்தை முன் வைப்பதாயின் அதனை எதிர்க்க முடியாது.

கிழக்கு மாகாணம் சில மாதங்களுக்கு முன்னர் தான் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரச படைகளால் மீட்டிக் கொள்ளப்பட்டது.

இந்த விடயத்தில் புலிகள் இயக்கத்தை விட்டுப் பிரிந்த அவ்வியக்கத்தின் முன்னாள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியான கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் அரசாங்கத்திற்கு பேருதவியாக செயற்பட்டார்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒவ்வொரு அங்குலத்தைப் பற்றியும் நன்கு அறிந்திருந்த அவரது குழுவினர் புலனாய்வுத் துறையில் அரசாங்கத்திற்கு பெரும் துணையாக அமைந்தனர்.

2004ஆம் ஆண்டு 'கருணா என்ற தனிநபர்' என்றே புலிகளின் தலைவர்கள் கருணாவைப் பற்றிக் கூறினர்.

ஆனால் தாம் தனிநபர் அல்ல என்பதையும் தம்மைப் பின்பற்ற ஒரு குழு இருப்பதையும் கருணா நிரூபித்துக் காட்டினார்.

புலிகள் அன்று வெறுகல் ஆற்றைக் கடந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வரும் போது தமது படையணிகளை கலைத்துவிட்ட கருணா, அரச படைகளோடு இணைந்து கிழக்கில் இருந்து புலிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

எனவே, கருணா குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் புலிகளின் இலக்குகளாக இருக்கின்றனர். அதன் காரணமாகவும், ஆங்காங்கு எஞ்சியிருக்கும் புலிகளின் உறுப்பினர்களை வேட்டையாடுவதற்கும் கருணா குழுவினரை தொடர்ந்தும் ஆயுதம் தரித்த நிலையிலேயே வைத்திருக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போதும், இம்மாதம் நடைபெற்ற மாகாணசபை தேர்தலின்போதும் இப்போது பிள்ளையானின் தலைமையிலான கருணா அணியினருக்கு ஆயுதம் தரித்தே போட்டியிட அரசாங்கம் அனுமதி வழங்கியது.

இதற்கிடையே கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக நிர்வாக அமைப்புக்களை மீண்டும் செயற்படச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையிலேயே கிழக்கில் மேற்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிள்ளையானின் தலைமையிலான குழுவும் இவற்றில் பங்குபற்றின.

எனவே, ஜனநாயகத்திற்கான தேர்தல்களின் போது ஜனநாயகத்திற்கு முரணான ஆயுதப் பாவனைக்கு பிள்ளையான் குழுவிற்கு அனுமதி வழங்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

இது தேர்தலில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை பாதிக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளவாவது அரசாங்கம் முன்வரவில்லை.

நிர்ப்பந்தத்தின் காரணமாக ஆயுதம் தரித்து நிற்க அனுமதித்த போதிலும் பிள்ளையான் குழு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவுவதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

எனவே, அவர்களுக்கு நிர்வாக பொறுப்புக்களை வழங்க வேண்டும் என அரசாங்கம் நினைக்கிறது போலும்.

இந்த அடிப்படையில் தான் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வேட்பு மனுத்தாக்கலுக்கு ஓரிரு நாட்கள் இருக்க அரச தரப்பிற்குத் தாவிய ஹிஸ்புல்லாஹ்வையும் புறக்கணித்து விட்டு ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தில் முதலாவது முதலமைச்சராக பிள்ளையானை நியமித்து இருக்கிறார்.

**அரசின் செய்தி!**

ஜனநாயக வழியில் வருவதாக இருந்தால் புலிகளின் தலைமைக்கும் வட பகுதி நிர்வாகத்தை கையளிக்க தாம் தயங்கப்போவதில்லை என்ற செய்தியை இதன் மூலம் வழங்குவதும் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பரந்த கண்ணோட்டத்தில் பார்த்தால் இக்கருத்துக்களை எதிர்க்க முடியாது.

ஆனால் இந்த அரசியல் உத்தியை செயற்படுத்தும் போதும் அரசாங்கம் முஸ்லிம்களை ஏமாற்றி விட்டது என்ற புதிய சர்ச்சையும் எழுந்துள்ளது.

கிழக்கு மாகாண தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய சக்தி என்பதை அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே உணர்ந்து இருந்தது.

எனவே, ஆரம்பத்தில் இருந்தே அக்கட்சி குறிவைக்கப்பட்டது. அரசாங்கம் ஹிஸ்புல்லாஹ்வை அழைத்ததோ, ஹிஸ்புல்லாஹ் கேட்டு அரசாங்கத்தில் இணைந்தாரோ தெரியாது, அவர் அரசாங்கத்தில் இணைந்து கொண்டார்.

முஸ்லிம் ஒருவர் கிழக்கில் முதலமைச்சராக வரவேண்டும் என்று ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் தம்மை முதலமைச்சராக நியமிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் அவர் தேர்தல் பிரசார காலத்தில் கூறி வைத்தார்.

தாம் அவ்வாறு வாக்குறுதியளிக்கவில்லை என ஜனாதிபதி அப்போது கூறவில்லை. முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக வேண்டும் என ஐ.ம.சு.மு அரசாங்கத்தின் முஸ்லிம் அமைச்சர்கள் மக்களிடம் வாக்கு கேட்கும்போது அது இனவாதம் என ஜனாதிபதியோ அல்லது வேறு எந்தவொரு அமைச்சரோ கூறவில்லை.

முஸ்லிம்களின் வாக்குகளை பெறுவதில் அரச தரப்பினர் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக முன் வைத்த பலம்வாய்ந்த துருப்புச் சீட்டும் இந்த முஸ்லிம் முதலமைச்சர் பதவியே.

ஆனால், தேர்தல் முடிவடைந்து முடிவுகள் வெளியான உடனேயே நிலைமை மாறிவிட்டது.

ஐ.ம.சு.மு. சார்பில் 8 முஸ்லிம்களும், 6 தமிழர்களும் தெரிவாகி இருப்பதால் தமக்கே முதலமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் என ஹிஸ்புல்லாஹ் கூறியதை ஜனாதிபதி ஏற்கவில்லை.

ஐ.ம.சு.மு.வில் உள்ள கட்சிகளில் எந்தக் கட்சி கூடுதலான ஆசனங்களை பெறுகிறதோ அந்தக் கட்சிக்கே முதலமைச்சர் பதவி தரப்படும் என்றே இணங்கியிருந்ததாக அவர் கூறி விட்டார்.

இந்த விடயத்தில் ஐ.ம.சு.மு. வில் உள்ள முஸ்லிம்களிடையே ஒற்றுமை இல்லாமல் போனதால் முதலமைச்சர் பதவி முஸ்லிம்களிடமிருந்து கை நழுவிப் போனதாகவே கூறப்படுகிறது.

**திடீர் இனவாதம்**

பிள்ளையான் முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி இனவாதத்தை தூண்ட வேண்டாம் என்றும் அது அழிவிற்கே வழி சமைக்கும் என்றும் கூறினார்.

முஸ்லிம்களுக்கே முதலமைச்சர் பதவி வேண்டும் என முஸ்லிம் அமைச்சர்களும், தமக்கே அப்பதவி கிடைக்க வேண்டும் என பிள்ளையானும் தேர்தல் பிரசார காலத்தில் கூறி வந்தனர்.

தேர்தல் காலத்தில் இவ்வாறு தத்தமது இனத்துக்கு முதலமைச்சர் பதவியை கேட்பது இனவாதமாக ஜனாதிபதியோ ஏனைய அமைச்சர்களோ வர்ணிக்கவில்லை.

தேரர்தல் முடிவுகள் வெளியான பின்னர் அக்கருத்துக்களை வெளியிடுவது தான் இனவாதமாக அவர்கள் கருதுகிறார்கள்.

தேர்தல் காலத்தில் கூடுதல் ஆசனங்களை பெறும் இனத்திற்கு அல்ல கூடுதல் ஆசனங்களை பெறும் கட்சிக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்பதை பகிரங்கப்படுத்தியிருந்தால் தேர்தலின் பின்னர் எந்தச் சர்ச்சையும் எழுந்திருக்காது.

ஆனால், அவ்வாறு கூறியிருந்தால் முஸ்லிம்களின் ஆதரவை பெறுவதில் ஐ.ம.சு.மு. சிரமங்களை எதிர்நோக்கியிருக்கும்.

எனவே, இன ரீதியிலான எதிர்பார்ப்புகளை வளரவிட்டு வாக்குகளை பெற்று விட்டு இப்போது அரசாங்கம் இனவாதத்தை தூண்ட வேண்டாம் என்கிறது.

கூடுதல் ஆசனங்களை பெறும் இனத்திற்கு அல்ல, கூடுதல் ஆசனங்களை பெறும் கட்சிக்கே முதலமைச்சர் பதவியை வழங்குவதாக தாம் கூறியதாக ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கூறியபோது, இல்லை நீங்கள் கூடுதல் ஆசனங்களை பெறும் இனத்திற்கே முதலமைச்சர் பதவியை வழங்குவதாக கூறினீர்கள் என எந்தவொரு அமைச்சரும் கூறவில்லை.

அவ்வாறாயின் தவறான முறையில் முஸ்லிம்களிடையே எதிர்பார்ப்புகளை தூண்டிவிட்டது முஸ்லிம் அமைச்சர்களா?

அவ்வாறாயின் தற்போது கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இலேசாகவேனும் ஏற்பட்ட மனக்கசப்புக்கு காரணம் அவர்களா?

இனப்பிரச்சினையின் தீர்வு என்ற நீண்ட கால கண்ணோட்டத்தில் பார்க்கும்போது பிள்ளையானை முதலமைச்சராக நியமித்தலில் அர்த்தம் இருந்த போதிலும், அதற்காக கிழக்கில் இனங்களுக்கிடையே முறுகலையோ மனக்கசப்பையோ ஏற்பட வழி சமைப்பது அந்த நீண்டகால கண்ணோட்டத்திற்கே மாறுபட்டதாக அமைந்திருக்கிறது.

ஏனெனில் அந்த மனக்கசப்புக்கள், பிணக்குகள் ஜனநாயகத்திற்கே அச்சுறுத்தலாக அமையக் கூடும்.

ஜனநாயகம் ஒருபுறமிருக்க, கிழக்கில் ஏற்பட்டு இருக்கும் யுத்தமற்ற சூழலையாவது பாதுகாப்பதே இப்போது எல்லா இனங்களினதும் தேவையாக இருக்கிறது. இன்றிலிருந்து நடக்கக் கூடியவை அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

## பிள்ளையான் முதலமைச்சரானதற்கு அமைச்சர் அதாவுல்லாவும் ஒரு காரணமா?

## அரசியல் வட்டாரத்தில் கேள்வி

**(நவமணி செய்தியாளர்)**

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படாமைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலருக்கும் தேசிய காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்குமிடையே காணப்பட்ட ஓர் இணக்கப்பாடே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு 12 முஸ்லிம் அமைச்சர்கள் மேற்கொண்ட போராட்டத்திலிருந்து திடீரென ஒதுங்கிய அமைச்சர் அதாவுல்லா தனது கட்சியைச் சேர்ந்த உதுமாலெவ்வையின் பெயரை அமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்ததனையடுத்து அரசாங்க கட்சி முஸ்லிம் தரப்பினர் மத்தியிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்தபோது ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சராக்காவிடின் எட்டு பேரும் சபையிலிருந்து வெளியேறுவது என்ற இணக்கப்பாட்டுடனே கூட்டத்திற்குச் சென்றுள்ளனர். ஆனால் முதலமைச்சராகப் பிள்ளையானே நியமிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட பின்பும்

அதாவுல்லாவின் அணியினர் அந்த நியமனத்துக்கு சாதகமாகவே நடந்துள்ளனர். முன்பு காணப்பட்ட இணக்கப்பாடு அவர்கள் இவ்வாறு நடந்துகொள்வதற்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைவரை எம்முடன் இணைந்திருந்த அமைச்சர் அதாவுல்லா ஜும்ஆ தொழுகையின் பின் மறுபக்கம் இணைந்து விட்டார். இதனால் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெறும் போராட்டம் பலமிழந்தது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முஸ்லிம் முக்கியஸ்தர் ஒருவர் நவமணிக்குத் தெரிவித்தார்.

இதேநேரம் அமைச்சர் அதாவுல்லாவின் இச்செயலைக் கண்டித்து தேசிய முஸ்லிம் கவுன்சில் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

அமைச்சர் அதாவுல்லா வழங்கிய எழுத்து மூலமான உத்தரவாதத்தைச் சாதகமாகப் பயன்படுத்தியே ஜனாதிபதி தனது கபட நாடகத்தை அரங்கேற்றியிருப்பதாக அக்கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைக்கு அதாவுல்லா அணியிலிருந்து நான்கு பேர் தெரிவாகியுள்ளனர்.

## கிழக்கு மாகாணத்தில் நாம் தோற்கவில்லை

## எங்களுக்குரிய மாகாணத்திலேயே முதலமைச்சரைப் பெறலாம்

## சாய்ந்தமருதுவில் மு.கா. தலைவர் உரை

''நிச்சயமாக முஸ்லிம்களுக்கான முதலமைச்சர் ஒருவரை எங்களுக்குரிய மாகாணம் அமைகின்றபோது தான் நாங்கள் அடைய முடியும்'' என்று சாய்ந்தமருதுவில் நடந்த மாபெரும் கூட்டத்தில் தெரிவித்தார் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்.

கிழக்கு மாகாண தேர்தல் மோசடிகள் குறித்து எமது கட்சி ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தனது வழக்கில் வெற்றி பெற்றிருக்கிறது என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

கல்முனை மாநகர மேயர் எச்.எம். ஹரீஸின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவாகியிருக்கும் சாய்ந்தமருது அமைப்பாளர் ஏ.எம். ஜெமீலின் ஏற்பாட்டில்

சாய்ந்தமருது கடற்கரையோரத்தில் நடந்த கூட்டத்தில் மு.கா. தலைவரும் கிழக்கு மாகாண உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது :

யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தல் 1981ஆம் ஆண்டு நடந்த போது படுமோசமான தேர்தல் மோசடிகளை அன்றைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் நடத்திய பின்னணியில்தான் தமிழருடைய போராட்டம் கூர்மையடைந்தது. அத்தேர்தலில் மோசடி செய்து வெள்ள வேண்டும் என்று அன்று ஐ.தே.க முயற்சித்த போது தமிழருடைய விடுதலைப் போராட்டம் விழிப்படைந்தது. எனவே தற்போது நடந்துமுடிந்துள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முஸ்லிம்களுக்கு அன்று 1981ஆம் ஆண்டின் யாழ்ப்பாண மாவட்ட சபைத்தேர்தலுக்கு ஒத்த தேர்தல் என்பதை மறந்து விடக்கூடாது. அந்த அடிப்படையில் இருந்துதான் இந்த மாகாணசபைத் தேர்தலின் முடிவுகளை நாங்கள் பார்க்க வேண்டும்.

இம்மாகாணசபைத் தேர்தல் எமக்குத் தோல்வியே அல்ல நாங்கள் எடுத்த முடிவுக்குப் பிறகு கட்சி வகுத்தவியூகம் இந்த அரசாங்கத்தை எப்படி தடுமாற்றத்தில் தள்ளியது என்பதை நாம் கண்டோம். ஸ்ரீ.ல.மு.கா.க்கு வாக்கு வங்கிக்குப் பின்னால் மறைந்துகொண்டு தங்களுடைய பலவீனத்தை மறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்து செயற்பட்ட முஸ்லிம் அமைச்சர்களைக் கண்டோம். முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி, இன்று முஸ்லிம் சமூகத்தின் அவ்ரத்தை (அந்தரங்கத்தை) மறைக்கும் ஒரே அங்கவஸ்திரமாக திகழும் முஸ்லிம் காங்கிரஸ் எனும் அங்கவஸ்திரத்தை எடுத்து முஸ்லிம் முதலமைச்சர் எனும் தலைப்பாகையால் கட்டிக்கொள்ளலாம் என்று நினைத்தவர்களும் அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தை நிர்வணமாக்கலாம் என்று முயற்சித்தவர்களும் இன்று நிர்வணமாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், தம்பிலுவில், நாவிதன்வெளி, பாண்டிருப்பு பகுதிகளில் நடந்த அதிவேக வாக்களிப்பின் பின்னணியில் நடந்த மோசடிகள் குறித்து அங்கு கடமையாற்றிய வாக்குச்சாவடி அதிகாரிகளில் சிலர் இம்மோசடிகள் குறித்து சத்தியக் கடதாசி சமர்ப்பித்து சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் தேர்தல் வாக்குச் சாவடிகளில் இருந்த மனச்சாட்சியுடைய அரச உத்தியோகத்தர்கள் எத்தனை பேர் என்பதுதான் இங்கு முக்கியமாகும்.

இத்தேர்தல் மோசடிகள் குறித்து எமது கட்சி ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய தயாராகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் மக்கள் மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தனது வழக்கில் வெற்றி பெற்றிருக்கின்றது. நாம் எடுத்த முடிவு சரியானது என்பதை நாம் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை அரசாங்கத்தில் இருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள் இப்போது நிரூபித்திருக்கின்றார்கள். 12 பேரும் ராஜினாமா செய்வோம் என்று கடிதம் கொடுத்தார்கள் இப்போது ஒவ்வொருவராக பின்வாங்கி இப்போது

முதன்மையான காட்டிக்கொடுப்பாளர்களாக அதாவுல்லாஹ் விளங்குகிறார். இவரைக் காட்டி ஏனையவர்கள் திப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் போட்டியிடுவது என்ற தீர்மானத்தின் அடிப்படையில் இன்று முஸ்லிம் காங்கிரஸ் வெளிப்படையாக ஆட்சியைக் கைப்பற்ற முடியாமற் போயிருந்தாலும் நாங்கள் இன்னும் வெற்றியாளர்களாக மக்கள் மத்தியில் நெஞ்சு நிமிர்த்தி நடப்பதற்கு எம்மால் இயலுமாகியிருக்கிறது.

முஸ்லிம் முதலமைச்சர் பதவிக்காக முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் இன்று புதிய புதிய வியாக்கியானங்களைக் கூறத் தொடங்கியுள்ளனர். அதில் ஒன்றுதான் சுழற்சி முறையிலாவது முதலமைச்சர் பதவி பெற போராடுவோம் என்று கூறுவதாகும். அதற்கு, முதலில் அமைச்சர் பதவி பெற்றுக்கொண்டு அரசுடன் இணைய வேண்டும். என்று கூறுகிறார்கள் இந்த ஹிஸ்புல்லாஹ்தான் எமது கட்சிக்குள் முதன் முதலில் சுழற்சி முறைக்கே குழி தோண்டியவர் என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஏறாவூருக்கும், ஓட்டமாவடிக்கும் சுழற்சி முறையில் முறையே இருவருடங்கள் பதவிவகிக்க இடமளிப்பதாக வாக்குறுதியளித்து பாராளுமன்றத்துக்கு சென்ற ஹிஸ்புல்லாஹ் தனது முதலாவது பராளுமன்றப் பிரவேசத்திலேயே சுழற்சி முறைக்கு வாக்குறுதியை மீறினார். அவர் மீண்டும் இந்த சுழற்சி முறைக்கு இன்று பிள்ளையானிடம் கையேந்துகின்ற நிலைமைக்கு ஆளாகயிருக்கிறார்.

## அரசியல்வாதிகளின் செயல்பாட்டில் புத்தளம் மக்கள் திருப்தியடைவதை விமர்சிக்கிறார் கலாநிதி அனஸ்

**(நவமணி செய்தியாளர்)**

‘‘புத்தளம் பிரதேசத்தின் செயற்பாடுகள் பல்வேறு முனைப்புகளில் முன்னெடுக்கப்படவேண்டும். அரசியல் வாதிகள் தமது இலட்சிங்களின் வழியில் நடந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அதுவே போதும் என்று எண்ணும் முட்டாள்தனமான மனப்போக்கில் புத்தள மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாக’’ பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் மற்றும் உளவியல் துறைத்தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் தெரிவித்தார்.

இலங்கையின் முதல் முஸ்லிம் சபாநாயகர் மர்ஹூம் எச்.எஸ். இஸ்மாயிலின் நினைவுதின வைபவம் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் அஸ்வர் மண்டபத்தில்

19.05.2008 இல் இடம் பெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எச்.எஸ். இஸ்மாயில் ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்த இவ்வைபவத்துக்கு சுகாதரா கல்வி அதிகாரி எம்.எஸ். அூசாலி தலைமை தாங்கினார்.

கலாநிதி அனஸ் அங்கு மேலும் உரையாற்றுகையில்:—

அரசியல் வாதிகளின் கைகளில் எல்லாவிடயங்களையும் ஒப்படைத்துவிட்டால் எல்லாவித சுபீட்சங்களையும் கண்டுகொள்ளலாம். என்ற ஒரு நப்பாசை காணப்படுகின்றது. அது முன்னொரு காலத்தில் அப்படி இருந்தது. முழுக்கிராமங்களும், நகரங்களும் எச்.எஸ். இஸ்மாயிலின் தலைமீது எல்லாவற்றையும் போட்டுவிட்டிருந்தனர். அவ்வாறே தொடர்ந்து வந்த நெய்னா மரைக்கார் தலை மீது எல்லாவற்றையும் சுமத்தி விட்டு பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த நிலமை இன்றில்லை இன்றைய அரசியல் நிலைமைகள், சுபாவங்கள், நெருக்கடிகள் எல்லாவற்றையும் பார்க்கும் போது அரசியல்வாதிகள் முழுப்பணிகளையும் செய்துமுடிப்பர் என்று எண்ணிவிட முடியாது.

எனவே சிவில் சமூகம் எந்த வகையில் இயங்க வேண்டும் என்ற பொறுப்புணர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். புத்தளப் பிரதேசத்தின் எந்தவொரு முன்னேற்றத்திலும் பொதுமக்களின் வகிபங்கு இருக்கின்றது என்று அழுத்திச் சொல்லும் நிறுவனமயப்பட்ட செயற்பாடுகளை புத்தளம் சிவில் சமூகம் பலப்படுத்த வேண்டும். இதன் மூலம் இப்பிரதேசத்தின் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தப்பிரதேசத்தின் இளைஞர்களின் எதிர்காலம் குறித்து சிவில் சமூகம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். அவர்களை மத்திய கிழக்குக்கு அனுப்பி ஒரு விதமான சம்பாத்தியத்தைப் பெற்று ஆசா பாசங்களை நிறைவேற்றிக் கெள்ளும் நிலையில் வைத்திருப்பதா? அல்லது இளைஞர்களைக் கல்வியற்றவர்களாக, தொழில் நுட்ப அறிவுள்ளவர்களாக, நிபுணத்துவம் பெற்றவர்களாக வெளியிடங்களுக்கு அனுப்புவதா? என்று சிந்திக்க வேண்டும். எனவே புத்தளம் பிரதேசத்தின் கல்வி பாடசாலைமட்டத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் கல்வியின் ஒவ்வொரு எல்லைகளையும் சென்று சந்திக்க வேண்டும்.

முஸ்லிம் பெண்கள் செய்யக்கூடிய தொழில் ஆசிரிய தொழில் என்று வரையறுத்திருக்கும் நிலையை புத்தளப் பிரதேசம் மாற்றியமைக்க வேண்டும். இன்று உலகில் ஏற்பட்டு வரும் முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் பார்க்குமிடத்து பெண்கள் செய்யக்கூடிய தொழில்களில் முஸ்லிம் பெண்களும் ஈடுபட வேண்டும். முஸ்லிம் பெண்கள் வைத்தியராக வரமுடியுமென்றால் ஏன் ஒரு தாதியாகவும் வர முடியாது. புத்தளத்தல் தாதியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். அரேபிய

நாட்டில் அடிமையாக வேலை செய்வதை விட முஸ்லிம் பெண்கள் தாதியராக பணிபுரிவதில் என்ன குறைபாடு இருக்கின்றது என்றார்.

இந்நிகழ்வில் சாஹிரா தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் சீ.எஸ்.எம். ஹனீபா, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் பௌசியா மஜீத், சிரேஷ்ட உலமாக்களான யஹ்யா, நிஸார் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

க.பொ.த. சா.த பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்த முஸ்லிம், தமிழ், சிங்கள மாணவர்களுக்கு வடமேல் மாகாணசபை உறுப்பினர் நியாஸ், ஸ்ரீ.ல.மு.கா. அமைப்பாளர் நவவி, கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் அன்சார் அலாவுதீன், புத்தளம் நகர சபை உறுப்பினர் முஹ்ஸி, பெரியபள்ளி தலைவர் முஸம்மில், ஹஸன் ஜே.பி. உட்படப்பலரும் நினைவுச்சின்னங்களை வழங்கிக் கௌரவித்தனர்.

## பலமானதொரு எதிர்க்கட்சியுடன் கிழக்கு மாகாண நிர்வாகம் இடம்பெறப் போவது வரவேற்புக்குரியது

**சோசலிச முன்னணி**

நிலையானதொரு பெரும்பான்மையுடன் பலம்வாய்ந்ததொரு எதிர்க்கட்சியுடனும் கிழக்கு மாகாணசபை நிருவாகம் இடம்பெறப் போவது நல்லதொரு அறிகுறியாகும் என சோசலிஷ முன்னணி தெரிவிக்கின்றது.

கிழக்கு மாகாண சபையின் தேர்தல் முடிவுகள் பற்றி விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சமசமாஜ கட்சி, கம்யூனிஷக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேசவிடுதலை மக்கள் கட்சி ஆகிய 5 கட்சிகள் இணைந்து சோஷலிச முன்னணி விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் சிறு, சிறு அசம்பாவிதங்கள் ஏற்பட்டபோதும், அத்தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கான தடைகளை பல சக்திகள் முயன்றபோதும் தேர்தல் சுமுகமாக நடைபெற்றதென்றும் பிள்ளையான் குழுவினர் தமது பாதுகாப்பின் பொருட்டு ஆயுதங்களை வைத்திருப்பது தவிர்க்க முடியாததென்றும் இவர்கள் தமது உரையின்போது தெரிவித்தனர்.

சோஷலிஸ முன்னணியின் அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

தேர்தல் முடிவின் தன்மை எவ்வாறான போதும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ.ல.மு.கா. ஆகிய கட்சிகளின் நேரடியான பங்குபற்றலும், தமிழ் தேசிய கூட்டமைப்பின்

மறைமுகமான பங்குபற்றலும் தேர்தல் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பங்களிப்பாக அமைந்துள்ளது.

நிலையானதொரு பெரும்பான்மையுடன் பலம் வாய்ந்ததொரு எதிர்க்கட்சியிடனும் கிழக்கு மாகாண சபை நிருவாகம் இடம்பெறப் போவது நல்லதொரு அறிகுறியாகும்.

தேர்தல் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாமல் சுதந்திரமாக நடைபெற்றதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. துயரமான சம்பவங்கள் இடம்பெற்றன. தேர்தலின்போது அம்பாறையிலும், திருகோணமலை மாவட்டத்திலும் பயங்கரவாதிகள் தாக்குதல்கள் இடம் பெற்றன. தேர்தல் வாக்குச்சாவடிப் பெட்டிகளில் மோசடிகள் இடம் பெற்றதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

எனினும் தேர்தலின் மீது மக்கள் கொண்டிருந்த அக்கறையின் காரணமாக தேர்தல் சுமுகமாக நடந்தேறியது.

### ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலுக்கான தேர்தலில் இலங்கை தோல்வி

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலுக்கான உறுப்பினர் தேர்தலில் இலங்கை தோல்வியடைந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலில் காலியான 15 இடங்களுக்கான தேர்தல் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் நடந்தது.

பொதுச்சபையின் 192 உறுப்பு நாடுகள் அதில் வாக்களித்தன.

ஆசிய நாடுகளுக்கான 4 காலியிடங்களுக்கான போட்டியில் இலங்கையிடன் 6 ஆசிய நாடுகள் போட்டியிட்டன. அதில் ஜப்பான் (155), பஹ்ரைன் (142), கொரியா (139) மற்றும் பாகிஸ்தான் (114) ஆகிய நாடுகளே வெற்றி பெற்றன.

இலங்கைக்கு 101 வாக்குகளே கிடைத்தன.

முன்னதாக மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான இலங்கை அரசின் செயற்பாடுகளைக் காரணம் காட்டி அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மூன்று பிரமுகர்களும், மனித உரிமை அமைப்புக்கள் சிலவும், இலங்கையை இத்தேர்தலில் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று கோரியிருந்தன.

## கிழக்கு மாகாண சபை முதல் அமர்வு ஜூன் 4 இல்

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் ஜூன் 4ம் திகதி நடைபெறும்.

திருகோணமலை முதலமைச்சர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்திலே இந்த அமர்வு நடைபெறும்.

இக்கூட்டத்தில் தவிசாளர் பிரதித் தவிசாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவார்கள்.

தவிசாளராக திருமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய உறுப்பினருமான எம்.கே.டி.எஸ். குணவர்தன அல்லது மும்மொழி அறிவுள்ள மௌலவி ஹஸன் ஆகிய இருவரில் ஒருவரே இப்பதவிக்கு ஆளும்கட்சி சார்பில் பிரேரிக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது. தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே அபேட்சகர் இவர் ஆவார்.

## சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் அழுத்தம்!

### ஐ.தே.க. செயலர் திஸ்ஸ அத்தநாயக தகவல்

(எஸ். விஜயன்)

சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவும்படி அரசும் வெளிநாட்டு தூதுவர்கள் ஊடாக அழுத்தம் கொடுக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நவமணிக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில்:—

17வது திருத்தச்சட்டத்தின் மூலம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன அரசசேவை ஆணைக்குழு ஆகியவற்றை அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எமது கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழு நிறுவப்படாததால் இன்று நீதி, நியாயமான தேர்தல் ஒன்றை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றன. அரசு தற்போது இவ்வருடத்துக்குள் மேலும் இரண்டு மாகாண சபைகளை கலைத்துவிட்டு தேர்தலை நடாத்த தயாராகின்றது.

அதற்கு முன் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு அரசுக்கு வெளிநாட்டு தூதுவர்கள் ஊடாக அழுத்தம் கொடுக்க ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

அதேநேரம், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் இவ்விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

## முஸ்லிம்களது பேரம் பேசும் சக்தியை இழந்திருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள்

கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராக முஸ்லிம் ஒருவரை நியமிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த பகிரங்க வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டு பிள்ளையான் எனும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் முதலாவது முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

முதலமைச்சராக முன்னாள் பிரதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து கடைசி நேரத்தில் கட்சிமாறி போட்டியிட்ட எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை நியமிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஒரு காலத்தில் நேர்மையாக அரசியல் செய்யும் ஒருவர் என்ற மதிப்புக்குரியவராக இருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் அரசாங்கத்தின் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் தேர்தலின்போது பகிரங்கமாக மாறி மாறி அளித்த வாக்குறுதி மீறப்பட்டு பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்பட்டபின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம்கள் கோருவது நியாயமானதல்ல எனற கருத்தினை அரசாங்கத்தின் தலைவர்களும் ஊடகங்களும் மாறி மாறிச் சுட்டிக்காட்டி வருகின்றன. முஸ்லிம் சமூகம் அதிகார வெறி பிடித்தவர்கள் என்ற கருத்தினைக் காட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டமான குற்றச்சாட்டு

முஸ்லிம் சமூகத்தின் மீது இந்த அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சமத்துவது நியாயமானதா? கிழக்கில் முஸ்லிம் சமூகத்தினைச் சார்ந்த 12 அமைச்சர்கள் இருக்கின்றனர். தமிழர்களில் ஒரேயொரு அமைச்சர்தான் வடக்கில் இருக்கிறார். இந்த

நிலையில் முஸ்லிம் சமூகம் முதலமைச்சர் பதவியைக் கேட்பது நியாயமானதல்ல என்று அரசின் அமைச்சர்கள் இப்போது தினமும் கூறிவருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்திற்கு 12 அமைச்சர் பதவிகளை வழங்கியிருப்பது முஸ்லிம் சமூகத்திலிருக்கும் இரக்கத்தினாலா அல்லது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் இருப்பினைப் பாதுகாத்துக் கொள்வதற்கா என்று எழுப்பப்படும் கேள்விக்கு இந்த அமைச்சர்கள் அளிக்கும் பதில் என்ன? கிழக்கிற்கு 12 அமைச்சர்களுட்பட அரசாங்கத்திலிருக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் எல்லோருமே அமைச்சர், பிரதி அமைச்சர்களாக இருக்கின்றனர். இருந்தும் சமூகத்தின் முக்கியமான கிழக்குக் காணிப் பிரச்சினை, மௌலவி ஆசிரியர் பிரச்சினை போன்றவற்றுக்கு இந்த அரசாங்கம் பதவியேற்று நான்கு வருடங்களாகியும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்கள் நான்கு வருடங்கள் தொடர்ந்து நிவாரணமின்றி தவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவூதி உதவியில் கட்டப்பட்ட வீடுகளைக்கூட கொடுக்க விடாது இனவாத அரச அமைச்சர்கள் தடுத்துள்ளனர். தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாதவர்களாக இருப்பது இந்த அமைச்சர்களுக்கிருக்கும் சக்தி எவ்வளவு என்பதனை உணர்த்துகின்றது. கிழக்குத் தேர்தலின் கடைசி இரு வாரத்திலே மௌலவி ஆசிரியர் நியமனம் தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது. இதற்கும் முஸ்லிம் முதலமைச்சருக்கு நடந்த கதி நடந்து விடுமோ என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சராக்குவோம் என்று முஸ்லிம் சமூகத்திற்கு ஆசைகாட்டி வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியைப் பறித்துக்கொண்டதோடு நின்றுவிடாது அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றுமாறு கேட்டதற்கு சமூகத்திற்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது எவ்வளவு தூரம் நியாயமானது என்ற கேள்வியை முஸ்லிம் சமூகம் எழுப்புகின்றது.

## பிள்ளையானுக்கே முதலமைச்சர்

பிள்ளையானுக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்ற இணக்கப்பாட்டுடனேயே அரசாங்கம் தேர்தலுக்குச் சென்றது. இதனைப் புரிந்துகொள்வதற்குத் தவறிய ஆளும்கட்சியின் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் சமூகத்தை அதலபாதாளத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டு இன்று மௌனம் சாதிக்கிறது. மற்றும் சிலர் பிள்ளையான் நியமனம் சரியானது என அறிக்கை விட்டுள்ளார்கள்.

ஹிஸ்புல்லாஹ்வுக்கு முதலமைச்சர் பதவி கிடைக்காவிடின் அதன் முழுப் பொறுப்பினையும் ரவூப் ஹக்கீமே பொறுப்பேற்க வேண்டும் எனக்கூறி கிழக்கு மாகாணமெங்கும் சூறாவளிப் பிரசாரம் செய்த ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர் இப்போது பிள்ளையான் நியமனத்தை நியாயப்படுத்தி அறிக்கை விட்டுள்ளார்.

## நம்பி வாழ்ந்த முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டனரா?

ஐக்கிய தேசியக் கட்சியைப் பாரம்பரியமாக ஆதரித்து வந்த முஸ்லிம்கள் கணிசமானோர் இம்முறை ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பினை ஆதரித்தனர். 10ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் மோசடிகள் நிறைந்ததாக இருந்தபோதும் அதற்கு முன் நடைபெற்ற தபால் வாக்களிப்பு நேர்மையாகவே நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் தேர்தல் நடவடிக்கைகளில் பணிபுரிந்த கணிசமான முஸ்லிம் அரச ஊழியர்கள் இருந்துள்ளார்கள். பெரும்பான்மையான அவர்களது தெரிவு சுதந்திரக் கூட்டமைப்பாகவே இருந்தது. அவ்வாறு சுதந்திரக் கூட்டமைப்பை நம்பி வந்த முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாது. இது சுதந்நிரக் கட்சியின் எதிர்கால வாக்கு வங்கியை சிதைக்கச் செய்யும் என்பது தவிர்க்க முடியாததே. சுதந்திரக்கட்சியின் பக்கம் முஸ்லிம்களைத் திருப்பும் கஷ்டமான காரியத்தில் இம்முறை சுதந்திரக் கட்சி வெற்றி கண்டது. அந்த வெற்றியைக் கண்டு 48 மணி நேரத்துக்குள் அவர்கள் மனம் புண்படும் வகையில் செயற்பட்டமை குறித்து முஸ்லிம்கள் கவலை கொண்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலை உருவாவதனைத் தவிர்க்கும் வகையில் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் ஏன் நடக்கவில்லை என்ற கேள்வியையும் சமூக ஆர்வலர்கள் எழுப்புகின்றனர். மோதல், முரண்பாடு தோன்றாது இப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதேன். முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் பேரம் பேசும் சக்தியை இழந்திருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இன்று முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் பல கூறுகளாகப் பிரிந்து இயங்குகின்றது. அமைச்சர் அதாவுல்லா தலைமையில் அவரை மட்டுமே கொண்ட தேசிய காங்கிரஸ், அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் அவரை மட்டுமே கொண்ட தேசிய ஐக்கிய முன்னணி, அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் நஜீப் ஏ. மஜீத், அமீரலி, ஹுஸைன் பைலா ஆகியோரைக் கொண்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் பௌஸியை மட்டும் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் பிரிவு, எந்தக் கட்சியுமின்றி செயற்படும் அமைச்சர் சேகு இஸ்ஸதீன், ஐ.தே.க. முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தாவிய நிஜாமுதீன் மற்றும் மையோன் முஸ்தபா ஆகியோர் தனித்தனிக் கட்சியாக இயங்கி வருகிறார்கள். ஆளுநர் அலவி மௌலானா இன்னுமொரு பக்கம். ஆலோசகர் அஸ்வர் மற்றுமொரு பக்கம். அமைச்சர் முஹம்மத் இன்னொரு பக்கம். இப்படித் தனித்தனியாக இயங்கும் அணியினரைச் சார்ந்த 12 பேர் கையொப்பமிட்டு ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சராக்க வேண்டுமென ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தார்கள். இந்தக் கையொப்பங்களுக்கு மதிப்பில்லை என்பதனை ஜனாதிபதி அவர்களது கோரிக்கையை நிராகரித்த முறையிலேயே

உணரக்கூடியதாகவுள்ளது. 12 பேரும் ஒன்று சேர்ந்து தொடர்ந்து போராடினார்களா என்பதும் கேள்விக்குறியாகவுள்ளது. முஸ்லிம் முதலமைச்சர் பதவியை நிராகரித்தவுடனே அமைச்சர் அதாவுல்லாவின் அணியைச் சார்ந்த உதுமாலெப்பை மாகாண அமைச்சர் பதவியை ஏற்பது எவ்வளவு தூரம் நியாயமானது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஒருமித்த சமூகப் போராட்டத்தைப் பலமிழக்கச் செய்த இந்தச் செயல் சமூகத்தைக் காட்டிக் கொடுத்த ஒரு செயற்பாடாகவே சிலர் சுட்டிக்காட்டுகிறார்கள். இப்பதவியை ஏற்குமுன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து முஸ்லிம்களுக்காக ஒதுக்கிய இரு அமைச்சர் பதவிகளை ஏற்று கசப்புணர்வு வளர இடமளிக்காதிருந்திருந்தால் எவ்வளவு சிறப்பானதாக இருந்திருக்கும் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அரசு முஸ்லிம் உறவில் களங்கம்

அவ்வாறு செய்திருந்தால் அரசுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவில் களங்கம் ஏற்பட்டிருக்காது. இன்று அரசு முஸ்லிம்களை ஏமாற்றிவிட்டது என்ற செய்தி உலகெங்கும் வியாபித்துவிட்ட நிலையிலே இணக்கப்பாட்டுக்கு வரப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியிலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் தூரநோக்கோடு செயற்படத் தவறியமையாலேயே இந்த நிலை உருவாகியுள்ளது.

முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுபடுவதிருக்க குறைந்தபட்சம் ஆளும்கட்சியிலிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் தனது பேரம் பேசும் சக்தியைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய வகையில் இனியாவது ஒன்றுபட்டு செயற்படத் தவறுமாயின் முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும். முதலமைச்சர் பதவியை மட்டுமன்றி இன்று அவர்கள் வகிக்கும் அமைச்சர் பதவிகளைக்கூட இழக்க நேரிடும் என்பதனை உணர்ந்து செயற்படுவது அவசியமாகும்.

vk;.v];. rg;hp.

## தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்காகவே மாகாண அமைச்சுப் பொறுப்பை ஏற்றேன்

## கிழக்கு மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் விளக்கம்

**(எஸ். விஜயன்)**

தமிழ், முஸ்லிம் மக்களின் இன ஒற்றுமையை கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண சபையின் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்க முடிவு செய்தோம் என கிழக்கு மாகாண

சபையின் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில் ஜனாதிபதி எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில்தான் முதலமைச்சர் பதவியைக் கோரினோம். தமிழர் ஒருவரிடம் இருந்து முதலமைச்சர் பதவியை பரிப்பது எமது நோக்கமல்ல நாம் சுயாதீனமாக மாகாணசபையில் செயல்பட்டால் இந்த விடயம் நிறைவு பெறாது. இதை மையமாகவே வைத்து கிழக்கில் சில பிரதேசங்களில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே சில அசம்பாவிதங்கள் எற்பட்டது. இதை கருத்தில் கொண்டே நாம் மாகாணசபையின் அமைச்சு பொறுப்புக்களை ஏற்கத் தீர்மானித்தோம்.

கிழக்கு மாகாண சபை மூலம் கடந்த 20 வருடங்களாக தீர்க்கப்படாத தமிழ் முஸ்லிம் பிரச்சினைகளை தீர்க்கவும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கும் ஆளுந்தரப்பில் அங்கம் வகிப்பது அவசியமாகும்.

## மாற்றுக் கருத்துக்களை மதிக்காததால் பிரச்சினைகள் உருவாகின்றன

### அ.இ.மு.லீ.வா.மு. வைபவத்தில்

### அமைச்சர் டிலான் பெரேரா உரை

''இன்று எமது நாடு எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக அமைவது நாம் தொடர்ந்தும் பிறர் கருத்துக்களையும் சிந்தனைகளையும் மதிக்காமல் வாழப் பழகியமையேயாகும். நாம் எப்போதுமே மாற்றுக் கருத்துக்களை மதிக்காமல் நமது கருத்துக்களை மட்டும் பிறர் மீது திணிக்க முற்படுகின்றோம். இதுவே வளர்ந்து பிரச்சினைகளைப் பூதாகரமாக்கியுள்ளது''

துறைமுக அபிவிருத்தி மற்றும் நீதி அமைச்சர் டிலான் பெரேரா அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த அதன் ஸ்தாபகர் தினம் மற்றும் மர்ஹூம் அல்ஹாஜ் தேசமான்ய பாக்கிர் மாக்காரின் பிறந்த தின நினைவுகூரல் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்வி வட்ட கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் ''வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் அரசியல்வாதிகளின் பங்கு'' என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்: ‘‘பிறர் கருத்துகளை மதித்து அவற்றை உள்வாங்கக்கூடிய மனப்பாங்கு நம்மிடையே வளராத வரையில் ஆரோக்கியமானதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது முடியாத காரியம். பல்லின மக்கள் கலந்து வாழும் ஒரு நாட்டில் சௌஜன்யம், சகவாழ்வு, ஒற்றுமை, ஒருமைப்பாடு போன்ற கோட்பாடுகளை உறுதியுடன் முன்னெடுத்து செல்ல முடியுமானால் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது அர்த்தமுள்ளதாக அமையும். தேசமான்ய பாக்கிர் மாக்கார் போன்ற சிரேஷ்ட அரசியல்வாதிகள் இதனையே வலியுறுத்தியிந்தார்’’ என்றார். வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசினார் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தேசியத் தலைவர் அல்ஹாஜ் என்.எம். அமீன்.

சம்மேளனத்தின் தேசிய பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் வரவேற்புரை வழங்கினார்.

இவ்வைபவத்தில் முக்கிய நிகழ்வாக அமைந்தது ‘‘முஸ்லிம் எய்ட்’’ அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி ஜனாப் அம்ஜாத் முஹம்மத் ஸலீம் ‘‘தேசத்தைக் கட்டி எழுப்புவதில் சிவில் சமூகம் எதிர்நோக்கும் சவால்கள்’’ என்ற தலைப்பில் ஆற்றிய உரையாகும்.

இவ்வைபவத்தில் தேசிய ஒற்றுமைக்கான பாக்கீர் மாக்கார் நிலையத்தினால் ‘‘பேருவளைப் பிரகடனம்’’ என்ற நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. தேசிய ஒற்றுமைக்கான பாக்கீர் மாக்கார் நிலையத்தின் தலைவர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அதன் முதற்பிரதியை பிரதம அதிதிக்குக் கையளித்தார். மேலும் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் மெஷின் வழங்கப்பட்டதோடு 22 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டது.

## சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள த.ம.வி.பு. தயார்

(எஸ். விஜயன்)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தயாராக இருப்பதாக கட்சியின் பேச்சாளர் அஸாத் மௌலானா நவமணிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எமது கட்சி சர்வகட்சி மாநாட்டில் முன்வைப்பதற்கான யோசனைகளை தயாரித்து வருகின்றது. அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் நிச்சயம் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு எமது யோசனைகளை முன்வைக்க தயாராக இருக்கின்றோம்.

இனப்பிரச்சினை தீர்வில் எமது பங்களிப்பை பூரணமாக வழங்க தயாராக இருக்கின்றோம் என்றார்.

இதேவேளை தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தமிழ் மக்கள் விடுதலை புலிகளும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தி சர்வகட்சி அமர்வுகளை தற்காலிகமாக பகிஷ்கரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பேரம் பேசுபவர்களல்ல, யாசகம் கேட்டும் ரோஷமில்லாதவர்களே இன்றைய அமைச்சர்கள்

**கிழக்கு மாகாண உறுப்பினர் ஜெமீல்**

‘‘எம்மைப் பொறுத்தவரை எமது அமைச்சர்கள் அரசியலில் பேரம் பேசுபவர்கள் அல்ல. அரசியலில் யாசகம் கேட்பவர்கள் அவர்கள். யாசகம் கேட்கும்போது யாசகம் போடுபவர் ஏசினாலும் பேசினாலும் ரோஷம் பாராட்ட முடியாதே. இதுதான் இன்றைய அமைச்சர்களின் நிலை’’.

இவ்வாறு கூறினார் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் இளைஞர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான ஏ.எம். ஜெமீல்.

கிழக்கு தேர்தல் தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர் மேலும் கூறியிருப்பதாவது :

‘‘கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தை நம்பி தமது வாக்குகளை அள்ளி வழங்கிய முஸ்லிம்கள் இன்று அழுது புலம்பியவண்ணம் உள்ளனர். தமக்கு யாராவது அநீதி இழைத்தால் சட்டத்திடமும் அரசாங்கத்திடமும் முறையிடலாம். ஆனால் நாட்டின் தலைவரும் அரசுமே துரோகம் இழைத்தால் அந்தத் துரோகத்தை எமது மக்கள் யாரிடம் சொல்லி அழுவது?

ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சர் ஆக்குவோம் என்று கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் அனைவரும் உட்பட வடமாகாணப் பிரதிநிதியான அமைச்சர் றிஷாட் பதியுதீன் மற்றும் அமைச்சர் பௌஸி, ஆளுநர் அலவி மௌலானா, ஜனாதிபதியின் ஆலோசகர் அஸ்வர் என எல்லோருமே மாறி மாறி மார்தட்டிக்கொண்டனர். இந்த வாக்குறுதிகளை எமது மக்கள் முழுமையாக நம்பினர். அதனால்தான் மிக இலகுவாக ஒரு முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக்கொள்ளும்

வாய்ப்பு எமது தரப்பில் இருந்தும்கூட குறிப்பிட்ட சில மக்கள் அரசின் கரங்களைப் பலப்படுத்தினர். தேர்தலின்போது இடம்பெற்ற மோசடிகள் அமைச்சர்களின் அடாவடித்தனம் என்பனவற்றைக்கூட சில இடங்களில் எமது மக்கள் பொறுமையாகச் சகித்துக்கொண்டனர். இல்லையேல் வெளியில் இருந்து வந்தவர்கள் அரசியல் விளையாட்டு விளையாடி விட்டுத் திரும்பிச் செல்லும் பூமி அல்ல கிழக்கு மாகாணம்.

தேர்தல் முடிவுகள் வந்தபின் ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சராக்கா விட்டால் அரசில் இருந்து விலகுவோம் என பூச்சாண்டிக் காட்டியவர்களுக்கு இப்போது என்ன நடந்தது? அவர் காலை வாரினார், இவர் காலை வாரினார் என்ற சாக்குப் போக்கு இனி சரிவராது. இந்த முஸ்லிம் அமைச்சர்களுக்கோ, ஆளுநர்களுக்கோ, ஆலோசகர்களுக்கோ சமூக உணர்வு இருந்தால் அல்லது தன்மானம் என்று ஒன்று இருந்தால் அல்லது இவர்களுக்கு அரசோடு பேரம் பேசும் சக்தி இருந்தால் இந்நேரம், ஹிஸ்புல்லாஹ் முதலமைச்சராகி இருக்க வேண்டும் அல்லது இவர்களுள் யாராவது ஒருவராவது இந்நேரம் அரசில் இருந்து வெளியேறி இருக்க வேண்டும். ஆனால், தமது பதவிகளுக்காக ஆசைப்பட்டு இன்னும் அரசோடு ஒட்டியிருப்பது மாபெரும் கேவலமாகும்.

எம்மைப் பொறுத்தவரை இவர்கள் அரசியலில் பேரம் பேசுபவர்கள் அல்ல. அரசியலில் யாசகம் கேட்பவர்கள். யாசகம் கேட்பவர்களைப் பொறுத்தமட்டில் யாசகம் போடும் எஜமான் ஏசினாலும் பேசினாலும் ரோஷம் பாராட்ட முடியாதுதானே. அதுதான் இன்றைய அமைச்சர்களின் நிலை. தாம் யாசகம் கேட்டுப் பெற்றுக்கொண்ட பதவிகளுக்காக எஜமான் விசுவாசத்தோடு இன்னமும் பணிபுரிகின்றனர்.

ஆனால், ஒன்றை இவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். கிழக்கு மண்ணில் இனி இவர்கள் யாருமே மக்களிடம் வாக்குப் பிச்சைக் கேட்க முடியாது. உண்மையான எஜமானர்கள் மக்கள்தான். நிச்சயம் இவர்களுக்குப் பாடம் புகட்டும் இன்னொரு சந்தர்ப்பம் எமது மக்களுக்குக் கிடைக்கத்தான் போகின்றது. அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர் சமூகம் இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இப்போதே தன்னை தயார்படுத்த ஆரம்பித்து விட்டது. இப்போதைய அரசின் அமைச்சர்கள் அனைவருக்கும் இனிவரும் தேர்தலில் பாடம் புகட்ட இளைஞர்கள் தயாராகி விட்டனர். எழுச்சி பெற்றுவரும் இந்த இளைஞர் சமூகத்தின் விழிப்புணர்வுக்கு முன்னாள் இப்போதைய அமைச்சர்களின் அரசியல் வாழ்வு அஸ்தமனத்தை சந்திப்பது நிச்சயம்.

## முஸ்லிம்களை ஏமாற்றினார் ஜனாதிபதி

**- உலமா கட்சித் தலைவர்**

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்படாததன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பகிரங்க வாக்குறுதியை மீறிவிட்டதாகவே அகில இலங்கை உலமாக்கட்சி கருதுகிறது.

உலமா கட்சியினராகிய எம்மைப் பொறுத்தவரை கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பிருந்தே திரு. மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து வருகிறோம். அந்த வகையில் கிழக்கு மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அத்தேர்தலில் ஆளும் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளிக்கும்படி ஜனாதிபதி செயலகம் எம்மை நேரடியாக அழைத்து வேண்டிக்கொண்டது.

அதன்படி எமது கட்சி இது பற்றி ஆராய்ந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளுந்தரப்பை ஆதரிப்பது என முடிவு செய்து அதனைப் பகிரங்கமாக அறிவித்தது. அத்தோடு நின்று விடாது அரசாங்கத்திடமிருந்தோ வேறு எவரிடமிருந்தோ ஒரு சதமேனும் பெறாமல் எமது சொந்தப் பணத்தில் தேர்தல் களத்தில் இறங்கி பாரிய பிரசாரங்களையும் மேற்கொண்டோம். இவ்வாறு நாம் செய்தது எமது சமூகத்துக்கான எமது அரசியல் வழிகாட்டலை செய்ய வேண்டுமென்ற கடமை உணர்விலாகும்.

உலமா கட்சியை பொறுத்தவரை மூன்று பிரதான நோக்கங்களுக்காக சுதந்திர முன்னணியை ஆதரித்தது. அவையாவன :

கிழக்கின் விடுதலையும் அதனூடாக அபிவிருத்தியும், கிழக்கு தனி மாகாணம் என்பதை நிலைநாட்டுவது, ஐ.தே.க. — மு.கா. கூட்டு என்பது முஸ்லிம் சமூகத்துக்கு பாதகமானது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துவது என்பனவாகும். கிழக்கு தேர்தலில் சுதந்திர முன்னணியை வெற்றி பெற செய்ததன் மூலம் மேற்படி மூன்று விடயத்திலும் நாம் வெற்றி கண்டோம். அத்துடன் முஸ்லிம்கள் நன்றி மறந்தவர்களல்ல என்பதையும் நாம் நிரூபித்தோம்.

தேர்தலில் முஸ்லிம் உறுப்பினர்கள் அதிகமாக தெரிவு செய்யப்பட்டால் ஹிஸ்புல்லாஹ் முதலமைச்சராவார் என்பது ஜனாதிபதி முஸ்லிம்களுக்கு அளித்த பகிரங்க வாக்குறுதியாகும். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என நாம் நம்பியிருந்தோம். ஆனால் இது விடயத்தில் ஜனாதிபதி மாற்றமான முடிவெடுத்ததை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தேர்தலில் விருப்பு வாக்கு அதிகம் பெறுபவர் முதலமைச்சர் என்றோ, கூட்டணியில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களின் தொகையை வைத்து அல்லது குழுக்களின் எண்ணிக்கையை வைத்து முதலமைச்சர் தீர்மானிக்கப்படும் என்றோ ஜனாதிபதியோ,

ஏனையவர்களோ தேர்தல் காலத்தில் கூறவில்லை. இப்போது இவற்றைக் கூறுவது ஓர் அரசியல் ஏமாற்று வார்த்தையாகும்.

ஹிஸ்புல்லாஹ் முதலமைச்சராக வேண்டுமென கூட்டமைப்புக்கு வாக்களித்த முஸ்லிம்கள் கூறுவதை சிலர் இனவாதமாக பார்ப்பது கவலை தருகிறது. மாறாக அது ஜனாதிபதியின் வாக்குறுதி என்பதனாலும் அதிக உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட ஒரு சமூகத்தின் ஜனநாயக ரீதியிலான கோரிக்கையுமாகும்.

ஆகவே, இது விடயத்தில் அரசாங்கம் தனது வாக்குறுதியை மீறி விட்டதனால் தொடர்ந்தும் நாம் அரசுக்கு ஆதரவாக செயற்படுவது எமது சமூகத்துக்கு செய்யும் துரோகமாகும். ஆகவே, அரசாங்கத்துக்கான எமது ஆதரவு எனும் நிலைப்பாட்டிலிருந்து உலமா கட்சி ஒதுங்கிக்கொள்கிறது என்பதை நாம் பகிரங்கமாக அறிவிக்கின்றோம்.

## காத்தான்குடியில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதற்கு எதிராக முஸ்லிம் மீடியா போரம் கண்டனம்

நேற்று எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் காத்தான்குடி அலுவலகத்துக்கு அவரை பேட்டி காணச் சென்றிருந்த ஊடகவியலாளர் ஜவ்பர்கான் தாக்கப்பட்ட சம்பவம் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவருடன் சென்ற மற்றுமோர் ஊடகவியலாளரான மௌலவி முஸ்தபாவும் அச்சுறுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவங்களை முஸ்லிம் மீடியா போரம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இப்படி நடந்துகொண்ட தம் ஆதரவாளர்கள் ஹிஸ்புல்லாஹ் கடிந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. இதனை வரவேற்கும் முஸ்லிம் மீடியா போரம் தொடர்ந்தும் இதுபோன்று நடைபெறாது இருக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறது.

சில வாரங்களுக்கு முன் ‘வார உரைகல்’ ஆசிரியரான ரஹ்மத்துல்லாஹ் (புவி)யும் அரசியல்வாதிகளின் அடாவடித்தனத்துக்கு உள்ளானார். அவரின் கெமராவும் சேதமாக்கப்பட்டது.

ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலான இது போன்ற சம்பவங்கள் ஜனநாயகத்துக்கு முரணான சம்பவங்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படாததையிட்டும் முஸ்லிம் மீடியா போரம் கடும் விசனம் தெரிவிக்கின்றது.

தகவல்களை அறிய மக்களுக்கு இருக்கும் உரிமையினை தடுப்பது ஜனநாயகத்துக்கு முரணான செயல் என்பதை முஸ்லிம் மீடியா போரம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

**கிழக்கு மாகாண ஊடகவியலாளர் கண்டனம்**

**(நமது நிருபர்)**

சுயாதீன செய்தியாளர் ரீ.எல். ஜௌபர்கான் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் அமைப்புக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

கடந்த திங்கட் கிழமை 1.20 மணியளவில் செய்தியாளரான எஸ்.எம்.எம். முஸ்தபாவுடன் செய்தி சேகரிக்கச் சென்ற ஹிஸ்புல்லாஹ்வின் காத்தான்குடி அலுவலகத்திற்கு சென்றபோது அவரது முன்னாலேயே ஜனாப் ஜௌபர்கான் அவரது சகாக்களினால் தாக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஹிஸ்புல்லாஹ் சம்பந்தப்பட்ட அரைக்காற்சட்டை கார்ட்டூன் சித்திரத்தை வழங்கியது ஜௌபர்கான் என குற்றம் சுமத்தியே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் அது தொடர்பாக அவருக்கு எதுவுமே தெரியாதாம்.

செய்தியாளர்கள் இப்பிரதேசத்தில் தொடர்ந்து தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் வன்மையான கண்டனத்திற்குரியதென ஊடக அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜௌபர்கான் சுயாதீனமாக முழுநேரமாக ஊடகத்துறையைத் தொழிலாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய கொள்கை பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டால் .....**

**(எஸ். விஜயன்)**

எதிர்வரும் 5ம் திகதி பாராளுமன்ற அமர்வை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து புதிய கொள்கை பிரகடன விளக்கமொன்றை முன்வைக்க உள்ளார்.

இக்கொள்கை பிரகடன விளக்கம் தொடர்பான விவாதத்தை அதற்கு மறுதினம் எடுக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை முன்வைக்கவுள்ளது.

இம்மாதம் 30ம் திகதி கட்சி தலைவர்களின் கூட்டத்தின்போது இக்கொள்கை பிரகடன விளக்கம் தொடர்பாக முழுநாள் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற

கோரிக்கையை முன்வைத்ததோடு பாராளுமன்ற ஒத்திவைப்பு தொடர்பாகவும் கேள்வி எழுப்ப ஜே.வி.பி. அரசியல்பீடம் தீர்மானித்துள்ளது.

## ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியைப் பெற போராடும் அமைச்சர்களை சமூகம் பாராட்டுகின்றது

**- உம்மாஹ்**

**(இர்சாத் ரஹ்மத்துல்லாஹ்)**

கிழக்கு மாகாண முதலமைச்சர் நியமனத்தை பிடித்துக்கொண்டு எதிர்க்கட்சியினர் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் இனக்கலவரங்களை தோற்றுவிப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுத்து வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள ஐக்கிய மக்கள் உம்மாஹ், அவர்களது சதிவலைகளில் வீழாது, சமூகத்தின் நலனையும், ஏனைய சமூகங்களினதும் உறவுகளையும் தக்கவைக்கும் பணிகளில் ஈடுபட முன்வருமாறு அமைச்சர்களுக்கும், மாகாணசபைக்கும் அக்கட்சியின் சார்பில் தெரிவான மூன்று முஸ்லிம் உறுப்பினர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் உம்மாவின் சிரேஷ்ட துணைத்தலைவர் ஏ.எல். ஜிப்ரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாண சபை தேர்தல் ஆரம்ப முதல், முஸ்லிம் அரசியல் வாதிகளை ஒன்றிணைத்து, கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது அந்த முயற்சியானது, சில தனிப்பட்டவர்களின் கருத்து முரண்பாட்டினால், ஒற்றுமைப்பட்டு ஓரணியில் போட்டியிடுவதென்ற முடிவுக்கு வருவதில் காலதாமதத்தை தோற்றுவித்தது. இருந்தபோதும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை எமது முஸ்லிம் உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டபோதும், எமது முஸ்லிம் அமைச்சர்களிடத்தில் காணப்பட்ட ஒற்றுமையின்மையினால், நாம் பெற வேண்டிய முஸ்லிம் முதலமைச்சர் பறிபோனதை மறந்துவிட முடியாது.

எமது எட்டு மாகாண சபை முஸ்லிம் அங்கத்தவர்களின் பலத்தைக் கொண்டு, ஜனாதிபதியுடன் பேரம் பேசி, எமது சமூகத்துக்குரிய பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அவற்றை இலகுவாக வென்றெடுத்திருக்கலாம். ஆனால், இச்சந்தர்ப்பத்தில், எமது முஸ்லிம் அமைச்சர் ஒருவர், கட்சியினூடாக தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களால் அவை முறியடிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெறும் முயற்சியின்போது, தங்களது அமைச்சுப்பதவிகள் பறிக்கப்பட்டாலும் பரவாயில்லை, ஜனாதிபதி எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் படி ஒரு முஸ்லிம் முதலமைச்சரை நியமிக்க வேண்டுமென போராடிக்கொண்டிருக்கின்ற அமைச்சர்களான நஜீப் அப்துல் மஜீத், றிஷாட் பதியுதீன், அமீர் அலி, பிரதி அமைச்சர் ஹுஸைன் பைலா போன்றோர்களின் துணிச்சல் மிகு செயற்பாட்டை முஸ்லிம் சமூகம் பாராட்டுகின்றது.

எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் நாம் இந்த உரிமைகளை வென்றெடுப்பதற்கும் இனவாத கட்சிகளின் கூக்குரல்களை அடக்குவதற்கும், விட்டுக்கொடுப்புக்களுடன், சுதந்திரமாக செயற்பட தீர்மானித்துள்ள மூன்று மாகாணசபை உறுப்பினர்களும், அரசாங்க அணியுடன் சேர்ந்து, எமது சமூகத்துக்கு அம்மாகாண சபை மூலமாக செய்யக்கூடிய உதவிகளை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

எமது முஸ்லிம்கள் மடையர்கள் அல்ல இந்த முஸ்லிம் முதலமைச்சர் பதவி சகோதரர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கு கிடைக்கக் கூடாது என செயற்பட்டவர், ஒரு முஸ்லிம் அமைச்சரும் அவர் சார்புடைய மாகாணசபை உறுப்பினர்களுமே என்பது யாவரும் அறிந்த உண்மை.

தமிழ், முஸ்லிம் உறவுகளை பிரித்து, நிலங்களையும், வளங்களையும் சூறையாட நினைக்கும், அரசியல் அங்கமுள்ள ஜாதிக ஹெல உருமய போன்ற இனவாதிகளுடைய வேலைத்திட்டங்களுக்கு சாவுமணி அடிக்கும் வகையில், எமது மூன்று உறுப்பினர்களும், தான் எடுத்துள்ள தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டுகின்றோம்.

இந்த தேர்தலில் வட—கிழக்கு இணைப்புக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரவு இல்லை என்பதை தெளிவாக வெளிப்படுத்தவுள்ளதாகவும் சிரேஷ்ட துணைத்தலைவர் ஜிப்ரி அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மூதூர் மீனவர்களுக்கு மீண்டும் பிரச்சினைகள்!

## ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கிறார்

### அமைச்சர் றிஷாட்

### (இர்ஷாத் ரஹ்மத்துல்லாஹ்)

மூதூர் பிரதேச மீனவர்கள் எதிர் கொள்ளும் கடற்றொழில் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு, மீள் குடியேற்ற, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூதூர் பிரதேச மீனவர்கள், கடற்பரப்பில் மீன் பிடிப்பதில், பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தமது கவனத்திற்கு மீனவர்கள் கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் றிஷாட் பதியுத்தீன் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மூதூர் பிரதேச மீனவர்கள் கடலுக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நேரக்கட்டுப்பாடு மீண்டும் பாதுகாப்பு அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் இவற்றை நீக்கி மீனவர்களின் வழமையான நடவடிக்கைகளுக்கு உதவுமாறும், அமைச்சர் றிஷாட் பதியுத்தீன் ஜனாதிபதியிடத்தில் கேட்டுள்ளார்.

## சலுகைகளை எதிர்பார்க்கும் அரசியல் தலைமைகளுக்கு நல்ல பாடம்

### புத்தளம் நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

(நவமணி செய்தியாளர்)

ஜனாதிபதி முஸ்லிம் முதலமைச்சரை வழங்க மறுத்தமை சலுகைகளை நோக்கித் திசை மாறிவிட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு கிடைத்த நல்லதொரு பாடமாகும். என்று புத்தளம் நகர சபை எதிர்க்கட்சித்தலைவரும் புத்தளம் நகர ஸ்ரீ.ல.மு.கா. மத்தியகுழுவின் செயலாளருமான எஸ்.ஆர்.எம். முஹ்ஸி தெரிவித்தார்.

இன்று முஸ்லிம்களுக்குத் தேவை அரசியல் வியாபாரிகள் அல்ல என்பதை சமூகம் உணர்வதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும் என்றும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து முஸ்லிம் முதலமைச்சரை ஜனாதிபதி வழங்காமல் முஸ்லிம்களை பெருத்த ஏமாற்றத்துக்குள் தள்ளியுள்ளமை தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காய் தனது முதுகெலும்பை அத்திவாரமாக இட்டு ஸ்ரீ.ல.மு.கா. எனும் மாபெரும் இயக்கத்தை தோற்றுவித்த தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் கனவுகளை நனவாக்க ஓரணியில் நின்று மக்கள் பலத்துடன் ஜனநாயக வழியில் போராட வேண்டிய முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது சுய இலாபம் கருதி பல்வேறு நொண்டிச்சாக்குப் போக்குகளைக் கூறி தமக்குள் பிரிவினைகளை வளர்த்ததே முஸ்லிம் முதலமைச்சர் கைநழுவிப் போனமைக்கு முக்கிய காரணமாகும்.

அல்லாஹ்வின் கை கூட்டமைப்பின் மீதே உள்ளது என்பதை இனியாவது முஸ்லிம் அரசியல் தலைமைகள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒற்றுமைப்படுவது, ஓரணியில் நிற்பது என்ற வாய்ச்சவடால்களில் எத்தகைய பலனும் இல்லை. நடைமுறை வாழ்வில் அது பரிணமிக்க வேண்டும். உலகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற மனோ இச்சையையே இன்று முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபடாமல் இருப்பதற்கு காரணமாகும். இறைநிராகரிப்பாளர்கள் எல்லோரும் ஓர் அணியில் திரண்டு விடுவர் என்பதையே தற்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சரின் நியமனம் பறைசாற்றுகின்றது.

முதலமைச்சர் பதவி கைநழுவிப்போனமை ஒரு புறமிருக்க கல்வி, காணி அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்களும் கூட பெரும்பான்மை இனத்தவரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இதைக்கூட தக்கவைத்துக்கொள்ள திராணியற்ற நிலையில் முஸ்லிம் அமைச்சர்கள் இருப்பது வேதனை தரும் விடயமாகும். அநாகரிகமான அரசியல் பேச்சுக்களும், முஸ்லிம் சகோதரனை எள்ளிநகையாடுவதும், வீராப்புப் பேச்சுக்களும், அடாவடித்தனங்களும், வன்முறைகளும், சூழ்ச்சிகளும் மலிந்த விட்ட முஸ்லிம் அரசியலால் மக்களின் வாழ்வு மிக மோசமாக மாசுபடுத்தப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் தங்களுக்கு விருப்பமான அரசியலை மக்கள் மீது திணிக்கும் நிலையை சிவில் சமூகம் மாற்றியமைக்க வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது. அன்றேல் முஸ்லிம்களின் அரசியல் கலாசாரத்தின் எதிர்காலம் மிக மோசமானதாகவே இருக்கும். அரசியல் கட்சிகளோ, ஆயுததாரிகளோ, பணமுதலைகளோ சமூகத்தை வழிநடத்தும் நிலைகள்மாறி சீரிய சிந்தனைகளோடு சிவில் சமூகம் அரசியலை வழிநடத்தும் நிலை உருவாக வேண்டும். இன்று முஸ்லிம்களுக்குத் தேவை அரசியல் வியாபாரிகள் அல்ல என்பதை சமூகம் உணரவேண்டும்.

## அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யும் துணிச்சல் முஸ்லிம் காங்கிரஸுக்கே உண்டு

தமது சமூகத்துக்காக அமைச்சுப்பதவிகளையும், எம்.பி பதவிகளையும் இராஜினாமாச் செய்யும் துணிச்சல் முஸ்லிம் காங்கிரசுக்கு மட்டுமே உண்டு.

கிண்ணியா நகரசபையின் உதவித் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.எம். முஜீப் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது : ஹிஸ்புல்லாஹ்வுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படாவிட்டால் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்யப்போவதாக முஸ்லிம் அமைச்சர்கள் அறிக்கை வெளியிட்டனர்.

எனினும், முதலமைச்சர் பதவி ஹிஸ்புல்லாஹ்வுக்கு அன்றி பிள்ளையானுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், எந்தவொரு முஸ்லிம் அமைச்சரும் தாம் சொன்னபடி இதுவரை தமது பதவியை இராஜினாமாச் செய்யவில்லை.

எனவே, முஸ்லிம் அமைச்சர்கள் சமூக நலனுக்காக அல்லாமல் சொந்த நலனுக்காகவே அரசில் இருக்கின்றனர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கும் பிரதிநிதிகளுக்கும் பதவிகளை விட தமது சமூகமே முக்கியமானது. அதனால்தான் கிழக்கு முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் ஆபத்து விளைவிக்கப்படுவதை ஆட்சேபித்து தலைவர் ரவூப் ஹக்கீமும் ஏனையோரும் அமைச்சுப் பதவிகளை தூக்கி வீசினர்.

அதேபோல கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம் முதலமைச்சர் உறுதிப்படுத்துவதற்காகவே தலைவரும் ஹஸன் அலி, பஷீர் சேகுதாவுத் ஆகியோரும் தமது எம்.பி. பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

எனவே, அமைச்சர்கள் இராஜினாமாச் செய்வதாக செல்வார்களே தவிர செய்ய மாட்டார்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் முக்கியஸ்தர்களின் ஏகமனதான கோரிக்கையை ஹிஸ்புல்லா ஏற்றார்!

## தமிழ்-முஸ்லிம் உறவுக்காக விட்டுக் கொடுப்பு!!

தேசிய நலன் தமிழ் — முஸ்லிம் உறவு, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாணசபையை சீராக இயங்க வைப்பதற்கு கிழக்கு மாகாணசபைக்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தெரிவு செய்யப்பட்ட மூவரும் ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று புதனன்று இரவு நடைபெற்ற முஸ்லிம் முக்கியஸ்தர்களது உயர் மட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பெற்றோலிய வள அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பௌசி தலைமையில் உலமாக்கள், புத்திஜீவிகள் முஸ்லிம் இயக்க பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே முதலமைச்சர் நியமனம் தொடர்பாக முரண்பட்டிருக்கும் மூன்று

உறுப்பினர்களுக்கும் ஆலோசனைகளை முன்வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூட்டத்தின் பின் விடுக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருந்தாவது:

கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படாதது கூர்ந்து விரிவாக ஆராய்ந்த இக்கூட்டத்தில் முதலமைச்சராக சிவனேசதுறை சந்திரகாந்தன் பதவியேற்றுள்ள நிலையில் மேலும் முரண்பட்டுச் செயற்படுவது தமிழ்—முஸ்லிம் உறவில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும் என்பதனாலும் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தமிழ்—முஸ்லிம் மோதலை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிக்க இடமுள்ளதனாலும் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களும் தமது ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும் எனக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் மூலம் தெரிவான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், எம். ஜவாஹிர் சாலி, எம்.எஸ். சுபைர் ஆகியோர் தமது ஆதரவினை வழங்குவதோடு ஜனாப் ஹிஸ்புல்லாஹ் அமைச்சுப் பதவியினை ஏற்பதே பொருத்தமானது என்றும் வேண்டுகோள் விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் தேசிய ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் கட்டி எழுப்புவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் சமூகம் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக இந்த அர்ப்பணத்தை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய ஹிஸ்புல்லாஹ் சமூக முக்கியஸ்தர்களின் ஏகமனதான கோரிக்கையைக் கருத்தில் கொண்டு அமைச்சுப் பொறுப்பினை ஏற்பதற்கு இணக்கம் தெரிவித்ததாகவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பிள்ளையான் கைப்பொம்மை முதலமைச்சரா?

## டி.பி.எஸ். ஜெயராஜ் விமர்சனம்

கிழக்கு மாகாண முதலமைச்சராக ஹிஸ்புல்லாவை விட பிள்ளையானை நியமிப்பதற்கு காரணம் ஹிஸ்புல்லாவை விட பிள்ளையான் ஒரு கைப்பொம்மையாகச் செயற்படுவார் என்பதனாலே என பிரபல அரசியல் விமர்சகர் டி.பி.எஸ். ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

முதலமைச்சராக பிள்ளையானோ ஹிஸ்புல்லாவோ வேறுயாரும் நியமிக்கப்பட்டாலும் பசில் ராஜபக்ஷவே உண்மையான முதலமைச்சராக இருக்கப் போகிறார். கிழக்கு

மாகாணசபையைப் பொறுத்தவரை உண்மையான அதிகாரம் பசிலிடமே இருக்கப் போகின்றது. அவரே பிரதானியாக இருப்பார். முதலமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் கைப்பொம்மைகளாகவே இருப்பார்கள்.

இது இப்போது நடந்துவிட்டது. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அன்றி பிள்ளையான் முதலமைச்சராகிவிட்டார் எந்தக்குறைபாடுகள் இருந்தாலும் பலி பாராளுமன்றங்களில் பணி புரிந்த ஹிஸ்புல்லா ஓர் அனுபவம்மிகு அரசியல்வாதி அவர் பிரதி அமைச்சராக இருந்துள்ளார். இரு அரச நிறுவனங்களில் தலைவராக இருந்துள்ளார். ஹிஸ்புல்லாவைக் கட்டுப்படுத்துவது பசிலுக்கு கஷ்டமானதாகவே இருந்திருக்கும் மறுபுறத்தில் பிள்ளையான் புதியவர் அவர் அமுல்படுத்துபவர்கள் சொல்வதைச் செய்பவராக இருப்பார்.

பிள்ளையானுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. வீரகேசரி மட்டக்களப்புச் செய்தியாளர் அய்யாத்துரை நடேசனைப் பட்டப் பகலில் அவரே சுட்டதாக குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. ரி.ஆர்.ஓ.வின் ஏழு உறுப்பினர்களைக் கடத்திக் கொண்டதாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுகள் சமத்தப்பட்டுள்ள ஒருவரே இன்று முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிள்ளையானை முதலமைச்சராக நியமித்ததற்கு காரணம் அவரை இலகுவாகக் கையாளலாம் என்பதனாலேயாகும். பிள்ளையான் தமக்கு இணங்காவிடின் தேவைப்படின் அவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பல கோவைகள் தயாரிலுள்ளன.

கருணாவைவிட பிள்ளையானுடன் விடயங்களைக் கையாளுவது இலகுவானது என உளவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிள்ளையான் கேள்விகள் கேட்காது அடி பணிவதற்கு தயாராக உள்ளவர்.

ஜாதிக ஹெல உறுமய பிள்ளையானை ஆதரிக்கின்றது. சிங்கள கடும்போக்குவாதிகள் தமது சிங்களமயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க பிள்ளையானே பொருத்தமானவர் எனக் கருதுகிறார்கள் ஜே.எச்.யு. கூடுதலாக கிழக்கு முஸ்லிம்களுக்கு எதிரான போக்கினைக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய சிரேஷ்ட தலைவர் ஒருவர் முஸ்லிம்கள் சவூதி அரேபியாவுக்குப்போக வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பிள்ளையானும் அவரது தமிழ் மக்கள் விடுதலை கட்சியும் அரசின் அடிமையாகச் செயற்படும்போது அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் ரி.லி.எப்.யூ. முஸ்லிம்களுக்கு எதிராக பொத்துவில், காத்தான்குடி மற்றும் கல்முனையில் செயல் பட்டது. ரி.லி.எப்.யூ. சிங்கள மீனவர்களுக்கு ஆதரவாக முஸ்லிம் மீனவர்களை கல்முனையில் அச்சுறுத்தியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரச்சாரம் இனவாத அடிப்படையிலே அமைந்திருந்தது. முஸ்லிம்களுக்கு முஸ்லிம் முதலமைச்சர் தருவோம் வாக்களியுங்கள் என்றும் தமிழர்களுக்கு தமிழ் முதலமைச்சரை நியமிப்போம் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

## முஸ்லிம் பிரிவினை வாதமோ, பயங்கரவாதமோ இந்நாட்டில் இல்லை!

## இல்லாத நோய்க்கு மருந்து தேட ஹெல உறுமய முயற்சி

### சிங்களத்தில் திசரணி குணசேகர

**தமிழில் எஸ். விஜயன்**

83 கறுப்பு ஜூலைக்கான காரணம் எல்.ரி.ரி.ஈ.யின் போ போ பிராவோ (Four Four Bravo) தாக்குதல் மூலம் இலங்கை இராணுவத்தின் 13 உறுப்பினர்களை கொன்றமையாகும். இருப்பினும் அக்காலப்பகுதியில் இந்நாட்டு அரசியலில் மற்றும் சிவில் சமூகத்தின் மத்தியில் நிலவிய இனவாத போக்கு இல்லாமலிருந்தால் கறுப்பு ஜூலையை நிச்சயம் தடுத்திருக்க முடியும்.

அமைச்சர் சிரில் மெதிவ் உட்பட அரச தரப்பிலும் எதிர் தரப்பு அரசியல்வாதிகளும் மற்றும் புத்திஜீவிகள் சிலரும் இந்த சிங்கள இன வாதத்துக்கு உயிர் ஊட்டினர். ஆயுதம் தாங்கி பிரிவினைவாதத்துக்கு துணைபோன தமிழர்களுக்கும் ஜனநாயக தமிழர்களுக்கும் இடையிலான வேறுபாட்டையும் ஒன்று படுத்தி இவர்கள் அனைவரும் சிங்கள இனத்துக்கு துரோகம் இழைக்கும் எதிரிகள் என்ற மனநிலையை தெற்கில் உருவாக்க இவர்கள் பாரிய பங்களிப்பை செய்தனர். புலிகள் இயக்கம் செய்த குற்றங்களுக்கு தெற்கில் நிராயுத அப்பாவி தமிழ் இனத்தவரை (குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட) பழி வாங்கும் நிலை உருவாகியது இவ்விதமே.

கறுப்பு ஜூலையில் சாதாரண தமிழ் மக்கள் துன்பங்களை அனுபவித்தனர். இருப்பினும் சிங்களவர்களுக்கு எந்த நன்மையும் கிடையாது. நன்மை கிடைத்தது புலிகளுக்கேயாகும். எல்.ரி.ரி.ஈ.யினர் சிறிய குழுவாக இருந்து உலகம் பூராகவும் விஸ்தரிக்கப்பட்டு பாரிய இயக்கமாக வளர்வதற்கு கறுப்பு ஜூலைதான் காரணம்.

கறுப்பு ஜூலைக்கு பல ஆண்டுகளுக்கு முன் தெற்கில் பரவியிருந்த இனவாத நோய்க்கு சமமான நோய் ஒன்றின் அறிகுறிகளை இப்போது காணமுடிகின்றது. கறுப்பு ஜூலைக்கு வழிவகுத்த வெறித்தனமான போக்கு தெற்கின் சமூகத்துக்குள் தானாகவே வரவில்லை. தமது பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக இந்த

நச்சுவிதையை திட்டமிட்டு சமூகத்துக்குள் வளர்ப்பதற்கு பிற்போக்குவாத சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகளால் முடிந்தது. அவ்வாறான நச்சுவிதை விதைப்பில் அவசரமாக ஈடுபட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இதில் ஈடுபடுவது ஜாதிக ஹெல உறுமயவாகும். அவர்களின் விளைச்சல் நிலம் கிழக்கு மாகாணமாகும். நச்சுவிதை முஸ்லிம் அச்சம்.

பல்வேறுபட்ட அரசியல் மற்றும் கருத்துக்களின் நிலைப் பாட்டுக்கு இடையிலான வேறுபாட்டை காணாததும் மற்றும் கவனத்தில் எடுத்துக்கொள்ளாததும் பிற்போக்குவாதிகளின் விஷேட அம்சமாகும். புலிகளின் நடவடிக்கை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். புலிகளின் உலகத்தில் எதிரி, அல்லது நண்பன் என்ற வேறுபாடு இல்லை. அவர்களின் நோக்கத்துக்கு அமைய தமக்கு எதிரான கருத்தை கொண்டிருப்பவர்கள் அனைவரும் தமது எதிரிகளேயாகும். எல்.ரி.ரி.ஈ.னரின் இந்த பிற்போக்குவாதத்தின் புதிய வெளியீடு கடந்த வாரத்தில் இடம்பெற்ற மகேஸ்வரி வேலாயுதத்தின் கொலையாகும்.

திருமதி வேலாயுதம் ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகராகவும் இருந்தாலுர். அதனோடு அவர் மனித உரிமை செயற்பாட்டாளராகவும் இருந்தார். மனித உரிமைக்கு உள்ளானவர் எவராக இருந்தாம் அரசியல் வேறுபாடு இன்றி எதிரி நண்பன் என்று பாராது உதவுவது அவரின் பழக்கமாகும். அதேபோன்று அவர் நிராயுத அரசியல் செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தார். இந்த வேறுபாடு எதுவும் புலிகளுக்கு அவசியமாக இருக்கவில்லை. தமது நம்பிக்கைக்கு அமைய அரசியலில் ஈடுபடும் உரிமை திருமதி வேலாயுதத்துக்கு இருப்பதை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அவர்கள் நோயுற்று படுக்கையில் இருந்த தனது தாயை பார்க்க யாழ்ப்பாணம் சென்ற திருமதி வேலாயுதத்தை கொலை செய்தனர்.

பிற்போக்குவாதிகள் கவனத்தில் எடுக்காதது நல்லது கெட்டதுமட்டுமல்ல. பிற்போக்கு உத்திகள் தூரநோக்கத்துடன் மட்டுமன்றி சுய அழிவுக்கு வழிவகுக்கும்.

இன்று உலகத்தில் அனேகமான நாடுகள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை தடைசெய்திருப்பது புலிகளின் பிற்போக்குவாத செயல்பாட்டின் காரணமாகவே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமமாக வாழும் கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தை காப்பாற்றுவதற்கு இந்த மூவினத்துக்கிடையில் நல்லெண்ணத்தை கட்டியெழுப்ப வேண்டும். கிழக்கில் எந்தவொரு இடத்திலாவது இன மோதல் ஒன்று ஏற்பட்டால் அது முழு மாகாணத்தையும் தீக்கிரையாக்க வழிவகுக்கும். ஜாதிக ஹெல உறுமய தற்போது மிக ஆர்வத்துடன் நடைமுறைப்படுத்தும் முஸ்லிம் விரோத சொற்போரை நாம் இந்த கண்ணோட்டத்துடனே பார்க்கவேண்டியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய இல்லாத ஒருநோயை உருவாக்கி அதை குணப்படுத்த முன்வருகின்றது. அவர்கள் முஸ்லிம் பயங்கரவாதத்தை பற்றி, முஸ்லிம் பிரிவினைவாதத்தை பற்றி பேசுகின்றனர். இந்நாட்டில் எந்த ஒரு முஸ்லிம் தலைவரும் பிரிவினை வாதத்தை பற்றி பேசுவதில்லை. இவர்களில் ஒரு சிலர் முஸ்லிம்கள் பெரும்பாலும் வாழும் மாவட்டத்துக்கு தனியான நிர்வாக அலகு ஒன்றை கோரியிருக்கலாம். இது ஒன்றும் பிரிவினைவாதமல்ல அதிகார பிரவலாக்கலாகும்.

கிழக்கில் ஒரு சில பகுதிகளில் முஸ்லிம் இளைஞர்கள் சில சிறிய ஆயுதங்களை வைத்திருந்தாலும் அது இலங்கை அரசுக்கு எதிராக அல்ல. புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து தமது கிராம மக்களை பாதுகாத்துக்கொள்வதற்காகும். உண்மை என்னவென்றால் முஸ்லிம் பிரிவினை வாதமோ அல்லது முஸ்லிம் பயங்கரவாதமோ இதுவரை இந்த நாட்டில் இல்லை.

இல்லாத அச்சுறுத்தல்கள், இடையூர்றுகளை காண்பது பிற்போக்குவாத கருத்துக்களையுடையவர்களின் பிரதான குணாதிசயங்களாகும். உதாரணமாக அமெரிக்காவில் சில பிற்போக்குவாத கிறிஸ்தவ பிரிவுகளின் நடத்தையை எடுத்துக் காட்டலாம். அவர்களின் முறுமுறுப்பு மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் கூற்றுக்கிடையில் மிக அபூர்வமான ஒற்றுமை நிலவுகின்றது. முஸ்லிம்கள் நஸரிஸ்தான் என்ற தனியான இராச்சியத்தை இலங்கையில் உருவாக்குவதற்கு உரித்தானதாக இருந்த அமெரிக்கன் பிராந்தியங்களில் அஸ்ட்லான் என்ற தனியான லத்தீன் இராஜ்யம் ஒன்றை உருவாக்குவதற்கு அமெரிக்காவில் வாழுகின்ற லத்தீனர்கள் சூழ்ச்சியொன்றை செய்தார்கள் என்கிறது.

சிங்கள பௌத்த தலைவர்களை நோய்க்குள்ளாக்கி கொலை செய்யும் கிறிஸ்தியானி சூழ்ச்சி ஒன்று இருப்பதாக ஒரு சில பிற்போக்குவாதிகள் அடிக்கடி கூறிவருகின்றனர். அமெரிக்காவின் ஒரு சில கிரிஸ்தியானி பிற்போக்குவாதிகள் கூறுகிறார்கள் அமெரிக்காவுக்கு தோல் நோய் (லாதுரு) பரப்பும் வெளிநாட்டு சூழ்ச்சி இருப்பதாக துரும்பையும் பெரும் மலையாக்கும் போக்கு உலகத்தின் அனைத்து பிற்போக்குவாதிகளுக்கும் பொதுவானது என்று இதன் மூலம் தெரிகின்றது.

சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளான பகுதி கிழக்கு மாகாணமாகும். விஷேடமாக அங்கு வாழ்கின்றவர்கள் முஸ்லிம்களாகும். கிழக்கு மாகாணத்தின் சுனாமி அகதிகளாக இருப்பவர்களுக்கு இன்னும் நிரந்தர வீடுகள் இல்லை. இந்த அகதிகள் சிலருக்கு வீடுகள் நிர்மாணிப்பதற்கு சவூதி அரேபியாவில் உள்ள ரெட் கிரெசன்ட் அமைப்பின் உதவியில் ஹிங்குரானை சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான காணியில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த திட்டத்துக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய வழக்கு தாக்கல் செய்துள்ளது. இந்த வீடமைப்பு திட்டம் தீகவாபி புண்ணிய பூமிக்கு அருகாமையில்

இருப்பதாகவும் இப்பிரதேசத்தில் சிங்கள பௌத்தர்களுக்கு வீடுகள் கிடைக்காததால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய வாதிக்கின்றது.

சிரில் மெதிவ் ஜே.ஆர். ஜயவர்தனவின் அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டுதான் நாடு பூராகவும் தமிழ் விரோத போக்கை விதைத்தார். அவரின் போக்கின் பயங்கர தன்மையை புரிந்துகொண்டதால்தான் அதன்பின் அதிகாரத்துக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும் இவ்வாறான சொற் பிரயோகங்களில் ஈடுபடுவதற்கு தமது அமைச்சர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் கீழ் இந்த நிலை மாறியுள்ளது. முஸ்லிம் விரோத போக்கு மட்டுமல்ல. தமிழ் மற்றும் கிறிஸ்தவ விரோத சொற் பிரயோகங்களில் அடிக்கடி ஈடுபடும் சம்பிக்க ரணவக்க ராஜபக்ஷ பங்காளி கட்சியாகும். இதனால் இவர்களின் பிற்போக்குவாதத்தின் ஒரு பகுதி அரசு மீதும் ஜனாதிபதி மீதும் சுமத்தப்படுகின்றதை தவிர்க்க முடியாது.

கறுப்பு ஜூலையை உருவாக்குவதற்கான பின்னணியை தயார் செய்வதற்கு அன்று ஜே.ஆர். ஜயவர்தன தமது அரசாங்கத்தின் சிலருக்கு வழி கொடுத்தார். அதன் பயங்கரத்தன்மையை உணரும்போது காலம் கடந்துவிட்டது. அன்று ஆரம்பித்த ஈழப்போர் இன்றும் முடியவில்லை. நாம் தற்போது தயாராகுவது இன்னுமோர் இனவாத யுத்தத்துக்கான பின்னணியை தயார் படுத்துவதற்காகவா?

நன்றி லங்காதீப!

## முஸ்லிம்களுக்கு இழைத்த தீங்குகளை மறந்து நல்லதைச் செய்வதற்கு பிள்ளையான் காத்திருக்கிறார்

**- மௌலவி ஹஸன்**

**நேர் கண்டவர்: இக்ராம் ஆப்தீன்**

சர்வதேச ரீதியாக ஆயுதம் தாங்கியவர் ஜனநாய நீரோட்டத்துக்கு வந்த பின் மக்களுக்கு மனிதாபிமான நோக்கில் சேவை செய்துள்ளதனை வரலாற்றுகளை நாம் அறிந்துள்ளோம். அதே நிலைப்பாட்டுடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் செயற்படுவார் என நாம் எதிர்பார்க்கின்றோம் என கிழக்கு மாகாணசபை திருகோணமலை மாவட்ட உறுப்பினர் மௌலவி எஸ்.எல்.எம். ஹஸன் (அஸ்ஹரி) கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே முஸ்லிம் வேட்பாளரான அவர் நவமணிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

அவர் தனது பேட்டியில் நவமணியின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:

**கேள்வி:** உங்கள் அரசியல் பிரவேசத்தின் நோக்கம்?

**பதில்:** குறிப்பாக தனிப்பட்ட முறையில் அரசியலில் வரவேண்டுமென்ற ஆசை எனக்கு கிடையாது. கடந்த காலங்களில் இலங்கை மக்களுக்கு குறிப்பாக திருமலையில் வாழும் மக்களுக்கு என்னால் முடியுமான சேவைகளை செய்து வருகின்றேன். நான் தனிப்பட்ட முறையிலும், எனது முயற்சியின் பலனாகவும் செய்யும் இந்த சேவையை நாட்டில் வாழும் அனைவரும் பெறக்கூடிய வகையில் இல்லை. ஆகவே, இதை பரவலாக நாடு முழுவதும் விஸ்தரிக்க வேண்டுமானால் மேலும் எனக்கு ஒரு பலமும் விஷேட அடையாளமும் தேவைப்பட்டது. எனவே, இதை அரசியல் பலமாகவே நான் கருதியதோடு இந்த அரசியல் பலம் எனக்கு கிடைக்குமானால் முழுமையான ஒரு சேவையை செய்யலாம் என்ற ஒரு நம்பிக்கை எனக்குள்ளது. ஆகவே, மக்களுக்கும், மண்ணுக்கும் சேவை செய்ய வேண்டும். அது நாடு புறாகவும் சென்றடைய வேணடும். என்ற ஒரு ஆசையை தவிர எனது தனிப்பட்ட சுயநல நோக்குகள் அல்ல. எனவேதான், கடந்த 15 ஆண்டுகளுக்குள் சுயேட்சையாக தராசு சின்னத்தில் முதலாவதாக போட்டியிட்டேன், அதில் மக்கள் மிக குறைவாக வாக்களித்தார்கள். 2001ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியில் யானை சின்னத்தில் கேட்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

பின் ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் காங்கிரஸ் கூட்டாக தேர்தலில் போட்டியிட்டது. எனக்கு அதிக ஆதரவு கிடைத்துக்கொண்டு இருக்கும் நிலையில் ஐ.தே.க. போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மறுப்பு தெரிவித்தது. பின் நுஆவில் கதிரை சின்னத்தில் போட்டியிட்டேன். அதன் பின் நடைபெற்ற தேர்தலில் திருமலை மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கேட்கவேண்டும் என கூறி அதில் நான் போட்டியிட்டு 26 ஆயிரம் வாக்குகளை பெற்றேன். சில வாக்கு விகிதாசாரத்தில் இரண்டாமிடத்தை பெற்றேன்.

இதற்கு பின் கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க.— மு.கா. கூட்டுடன் இணைந்து போட்டியிடுவதன் மூலம் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியுமென நினைத்து அதனுடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்தேன். அப்போது வெளிப்படையாகவே மு.கா. தலைமைத்துவம் மறுத்துவிட்டது. ஐ.தே.க. இதனை ஒத்திப்போட்டுக்கொண்டிருந்தது. இன்னிலையில் ஜனாதிபதியும் அவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவும் மாவட்ட ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் பிரபல்யமானவர் ஹஸன் மௌலவி தான் என இனங்கண்டு அவர்களின் கட்சியில் போட்டியிடுமாறு

என்னை அழைத்தனர். எனவே, ஏதாவது அரசியல் கட்சியுடன் இணைந்துதான் எனது பலத்தை பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எனக்கிருந்தது. ஆனால், சுயேட்சையாக நின்று பலத்தை பெற முடியாது. எனவே, இதனை நான் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டேன்.

**கேள்வி:** மாகாணசபை தேர்தலில் நீங்கள் பெற்ற வெற்றி தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** பொதுவாக இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் தேர்தல் ஒன்றை முகம் கொடுக்கும்போது தாங்கள் சார்ந்த கட்சிகளுக்கே முன்னணி வழங்கி வாக்களிக்கின்றனர். ஆனால், இந்த நிலைப்பாட்டை இல்லாமல் செய்வதே எனது நோக்கம். எனவே, தேச வாதமும் கட்சிவாதமும் மக்களிடமும் அரசியல்வாதிகளிடமும் இருக்கும் வரை இந்த நாட்டை முன்னேற்றுவது இலகுவான விடயமல்ல. நான் அப்படியல்ல. எந்த கட்சியில் மக்களுக்கு நன்மை கிடைக்கிறதோ மக்கள் எந்த கட்சியை விரும்புகின்றார்களோ அந்த கட்சியை ஆதரிப்பதும் அதனுடன் இணைந்து போவதுமே எனது நிலைப்பாடு. நான் சார்ந்திருக்கும் கட்சி எனக்கு உதவுமாக இருந்தால் அதை ஆதரிப்பேன் அல்லது அந்தக்கட்சி மக்களுக்கு உபத்திரமாக மாறுமானால் அதை எதிர்ப்பேன். எனவே, எனக்கு கிடைத்திருக்கும் வெற்றியும் 17 ஆயிரம் வாக்குகளும் கட்சி சார்ந்த வாக்குகள் அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்தார்கள். சுதந்திர கூட்டணியின் ஆதரவாளர்கள் சுதந்திர கூட்டணிக்கு வாக்களித்தார்கள். இவைகள் போக எனக்கு அளிக்கப்பட்ட வாக்குகள், என்மேலுள்ள அன்பினாலும் எனது சேவையினாலும் எனக்கு கிடைத்த எனது சொந்த வாக்குகள் எனவே, நான் இனி எந்த கட்சியில் கேட்டாலும் இந்த வாக்குள் எனக்கு கிடைக்கும். கடந்த 15 வருடங்களாக நான் உழைத்த உழைப்புக்கு மக்கள் தந்திருக்கும் அங்கீகாரமே இந்த வெற்றி. ஆகவே, நான் எந்த தேர்தலில் கேட்டாலும் எனது சொந்த வாக்குகளுக்கு பின்னரே நான் இணைந்திருக்கும் கட்சிகயின் வாக்குகள் சேர்க்கப்படும் என் அரசியல் பிரவேசத்தில் பல தேர்தலில் நான் வெற்றி பெறவில்லை என்றாலும் அதை நான் எப்போதும் தோல்வியாக நினைத்ததில்லை. அதை ஒரு ஒத்திவைக்கப்பட்ட வெற்றியாகவே நான் கருதுகிறேன்.

கடந்த காலங்களில் திருமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மத்தியில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கான வாக்குகள் மிகவும் குறைவாக காணப்பட்டன. ஏனெனில் திருமலையை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களின் செயற்பாட்டினால்தான் எனக்கூறமுடியும். ஆனால், இம்மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனுசரணையில் போட்டியிட்ட நான் இவ்வெற்றியைப் பெற்றிருப்பது ஒரு சரித்திர சாதனை என்றே கூறவேண்டும்.

**கேள்வி:** கிழக்க மாகாண முதலமைச்சர் பிள்ளையான் கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வார் என நீங்கள் நம்புகின்றீர்களா?

**பதில்:** சர்வதேச ரீதியாக ஆயுதம் தாங்கியவர்கள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்து பின் மக்களுக்கு பல மனிதாபிமான சேவைகள் செய்த வரலாறுகளை நாம் அறிந்துள்ளோம். அதே நிலைப்பாட்டுடன் எமது முதலமைச்சர் பிள்ளையானும் செயற்படுவார் என நாம் எதிர்பார்க்கின்றோம். நாம் கிழக்கில் தமிழ் பேசும் இனம் என்ற ஒருமைப்பாட்டுடன் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்கு அவர்கள் இழைத்த தீங்குகள் அனைத்தையும் மறந்து அதற்கு பிரதியுபகாரமாக முஸ்லிம்களுக்கு நல்லவைகளைச் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் தான் முதலமைச்சர் பிள்ளையான் இருக்கிறார். அவர் முஸ்லிம்களுக்கு நியாயமான சேவையை வழங்குவார் என நாம் நம்புகின்றோம்.

**கேள்வி:** மாகாணசபை உறுப்பினர் என்ற வகையில் கிழக்கு மக்களுக்கு எவ்வாறான சேவைகளை வழங்கவுள்ளீர்கள்?

**பதில்:** என்னை வேட்பாளராக போட்டியடுமாறு கோரி என்னை சந்தித்த பசில் ராஜபக்ஷ என்னிடம் முதலில் அபிவிருத்திகளையும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் காட்டினார். எனவே, மக்களுக்குத் தேவையான அனைத்து அபிவிருத்திகளையும், வேலை வாய்ப்பினையும் அதிகம் வழங்கவுள்ளேன். இதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையும், மாகாணசபை அதிகாரத்தையும் ஊடகமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**கேள்வி:** கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் உறவை வலுப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளீர்கள்?

**பதில்:** முதலில் தமிழ் — முஸ்லிம் உறவின் அடிப்படைகளை இம்மக்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை. ஒரு பௌத்தரிடம் துவேஷம் இருந்தால் அவன் உண்மையான பௌத்தன் அல்ல. ஒரு தமிழரிடம் துவேஷம் இருந்தால் அவன் உண்மையான தமிழர் அல்ல. ஒரு முஸ்லிமிடம் துவேஷம் இருந்தால் அவர் உண்மையான முஸ்லிமல்ல எந்த மதமும் துவேஷத்தை தூண்டவில்லை.

தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் மத்தியில் ஒரு உறவை வலுப்படுத்தும் நிலையமாக பாடசாலைகள், சமய நிலையங்கள் மற்றும் அரசியல்வாதிகள் முன்மாதிரியாக திகழ வேண்டும். அனைத்து இடங்களிலும் இன உறவு தொடர்பாக பேசப்பட வேண்டும். தனியாக ஓரினமுள்ள இடங்களில் மற்றைய இனங்களைப் பற்றி நல்ல உணர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் பேசப்படவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இன உறவை வலுப்படுத்த முடியும் என நான் கருதுகிறேன்.

**கேள்வி:** கிழக்கு மாகாணசபை தவிசாளர் பதவிக்கு நீங்கள் முயற்சிப்பதாக கூறப்படுகிறதே தவிசாளர் பதவி உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புள்ளதா?

**பதில்:** கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அதிகமாக தமிழ் பேசும் மக்களே உள்ளனர். எனவே, அங்கு மூன்று மொழிகளும் தெரிந்த ஒருவர்தான் தவிசாளர் பதவிக்கு பொருத்தமானவர் என அரசியல் உயர் மட்டங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இந்த அடிப்படையில் நான் பொறுத்தமானவர் எனக்கருதி பல அமைச்சர்கள் என்னை சிபாரிசு செய்துள்ளதாக நான் அறிகின்றேன். ஆனால், இந்த சிபாரிசுகள் எந்தளவு சாத்தியப் படும் என்பது பொருத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அதேநேரம், முஸ்லிம் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தனக்குத்தான் அந்த பதவியைத் தரவேண்டும் என ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக நான் அறிகின்றேன். இதனால் இப்பதவி எவருக்கு கிடைக்கும் எனக் கூறமுடியாது.

**கேள்வி:** கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளை ஒன்றிணைக்க ஏதாவது முயற்சிகள் செய்யவுள்ளீர்களா?

**பதில்:** கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல தவறுகளை விட்டுள்ளது. அதனை தற்போது உணர்ந்து செயற்படுகின்றமையையும் அறியமுடிகின்றது. அதேபோல் முஸ்லிம் காங்கிரஸை விட்டு விலகிச் சென்றவர்கள் நாம் ஒரு சக்தியாக நின்று இத்தேர்தலில் போட்டியிட்டிருந்தால் தற்போது ஏற்பட்ட முதலமைச்சர் பதவி தொடர்பான பிரச்சினையே ஏற்பட்டிருக்காது இத்தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் 80 வீதமான அதிகாரம் முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கும்.

எனவே, இந்நிலையை எல்லா முஸ்லிம் அரசியல் வாதிகளும் உணரப்படவேண்டும். தனிப்பட்ட பதவி, தலைமைத்துவ மோகம் தளர்த்தப்படுமாக இருந்தால் மட்டும்தான் முஸ்லிம்கள் ஐக்கியமாக ஓர் அணியில் வரக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். தான்தான் தலைவர் என்ற பதவி மோகம் விடுபட்டு நல்ல நோக்கம் உருவாக்கப்படும்போதுதான் முஸ்லிம்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை இந்த முஸ்லிம் தலைவர்களால் வழங்க முடியும். அத்தோடு, அரசியலும், ஒழுக்கமும் ஒன்று என்ற நிலைப்பாட்டை அரசியல்வாதிகளுக்கு தெளிவு படுத்தவும் வேண்டும்.

**ஒன்று பட்டு ஒரு சக்தியாக மாறினால் மட்டுமே முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான எதிர்காலம்!**

**- அபூ ஸஹ்ரா -**

கிழக்கு மாகாண தேர்தலில் பிள்ளையான் தரப்பு பிரதிநிதித்துவம் கூடினால் பிள்ளையானே முதலமைச்சர், ஹிஸ்புல்லா தரப்பு பிரதிநிதித்துவம் கூடினால் ஹிஸ்புல்லாஹ்வே முதலமைச்சர். இப்படி பகிரங்கப் படுத்தி தமிழர்களை பிள்ளையானுக்கும் முஸ்லிம்களை ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இனரீதியில் வாக்களிக்கச் செய்து அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தை வளர்த்தது அரசு மேல் மட்டம்.

தமிழர்களும் முஸ்லிம்களும் இனரீதியில் செயல்பட்ட பின், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமே கூடியது. ஆனால், முஸ்லிம்களுக்கு நீதி வழங்கவில்லை அரசு. முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதக் கொள்கைக்கு முக்கியத்துவமளித்து பிள்ளையானை முதலமைச்சராக்கியது.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை முஸ்லிம்களைப் புறக்கணிப்பதும் ஏமாற்றுவதும் இது முதல் தடவையல்ல. சுதந்திரத்துக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் முஸ்லிம்களை வஞ்சித்தே வந்துள்ளது. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் தமிழர் தரப்பில் ஐம்பதுக்கு ஐம்பது கேட்கப்பட்டபோது அதனை ஆதரிக்காது எத்தகைய நிபந்தனையும் வேண்டாம். முதலில் நாட்டுக்கு சுதந்திரம் தாருங்கள். எங்களுக்கு ஏதும் பிரச்சினைகள் இருந்தால் சுதந்திர இலங்கைக்குள் தீர்த்துக் கொள்வோம் என்று உறுதியாகக் கூறினார் மறைந்த டி.பி. ஜாயா.

முஸ்லிம்களின் ஆதரவு சிங்களவர்களுக்கு ஆதரவாக இருந்ததால், சுதந்திரம் கோருவோரின் கை ஓங்கியதால் வெள்ளையரும் சுதந்திரத்தை வழங்கினர். சுதந்திரத்துக்கு முன் எப்படி நாட்டை நேசித்தனரோ அதே விதமாக கடந்த 60 ஆண்டுகளாக நாட்டின் மீதான விஸ்வாசத்தைக் குறைவின்றி காட்டி வருகின்றனர் முஸ்லிம்கள்.

நாட்டைப் பிரிக்கும் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் ஆதரவாக இல்லாததால் அவர்களது உயிர்கள் பறிக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையிடப்பட்டன. சொந்த வசிப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்டார்கள். அகதிகளாக்கப்பட்டார்கள். அநியாயத்துக்கு மேல் அநியாயம் நடந்தபோதும் முஸ்லிம்கள் கொண்ட கொள்கையிலிருந்து மாறவே இல்லை. ஐக்கிய இலங்கையையே ஆதரித்தனர். ஜனநாயகத்தையே விரும்பினர்.

என்றாலும் பேரினமும் பேரினக்கட்சிகளும் முஸ்லிம்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவில்லை. முஸ்லிம்களின் உரிமைகளைப் பறித்தனர். பாதுகாப்பை அலட்சியப்படுத்தினர்.

பேரினப் போக்கை சந்தேகத்துக்கிடமின்றி புரிந்து கொண்ட மறைந்த எம்.எச்.எம். அஷ்ரஃப் முஸ்லிம்களுக்கெனத் தனிக்கட்சியைத் தொடங்கினார். முஸ்லிம்களின் நிலையை உயர்த்தவும் வழி செய்தார். இந்த நாட்டில் முஸ்லிம்களும் ஒரு சக்தி

என்பதை உணர்த்துவதே அவரது நோக்கமாக இருந்தது. அவரது விவேகம், செயற் திறன் ஆகியன பயனளிக்கத் தொடங்கியபோது அவர் கொல்லப்பட்டார்.

மறைந்த அஷ்ரபால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் அவர் உயிருடன் இருந்தபோதும் பிரிந்தது. அவர் இறந்த பின்பும் பிரிந்தது. என்றாலும் கிழக்கு மாகாணத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதும் முஸ்லிம்கள் அனைவரும் அனைத்து பேதங்களையும் மறந்து ஐக்கியப்பட்டு ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டு தங்கள் சக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

முஸ்லிம்களின் ஐக்கிய உம்மா என்ற அமைப்பு முஸ்லிம் அரசியல்வாதிகளையும் புத்தி ஜீவிகளையும் ஒன்று கூட்டியது. அப்போது ஒரே சின்னத்தின் கீழ் கிழக்கு தேர்தலில் போட்டியிடும் யோசனை முன்வைக்கப்பட்டது. ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் மரச்சின்னத்தில் மட்டுமே போட்டியிடுவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுப்பை செய்ய அவர் தயாராக இருக்கவில்லை.

விளைவு ஒற்றுமை முயற்சி தோல்வி கண்டது. முஸ்லிம்கள் மத்தியில் மரச்சின்னத்தை வலியுறுத்திய ரவூப் ஹக்கீம், கட்சிப் பெயர், சின்னம் இரண்டையும் கைவிட்டு ஐ.தே.கட்சியிலும் யானைச் சின்னத்திலும் போட்டியிட முன்வந்தார்.

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் முஸ்லிம்களை ஏமாற்றியவர், வஞ்சித்தவர். முஸ்லிம்கள் என்றால் அவருக்கு கசப்பு. முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்காவின் ஆப்த நண்பர் அவர் ஸியோனிஸ்டுகளுக்கும் ஆதரவானவர். இதனால் அவரது கட்சியினட் நீண்டகால முஸ்லிம் உப்பினர்கள் பலரும் அவரை விட்டு ஒதுங்கியுள்ளனர்.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தனித்தரப்பை ஏற்காதவர் அவர். இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையில் ரவூப் ஹக்கீமை கலந்து கொள்ளச் செய்தாலும் அரசாங்க பிரதிநிதியாகவே அவர் செயல்பட வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறியிருந்தார்.

அமெரிக்காவுக்கும் இஸ்ரேவேலுக்கும் எதிராக ஐ.தே.க. முஸ்லிம்கள் பேசக் கூடாது, எதையும் செய்யக் கூடாது என்று வாய்ப்பூட்டு போட்டவர், தடை செய்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது முஸ்லிம் நாடுகளுக்கு விஜயம் செய்வதை தவிர்த்து வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

இந்நாட்டு முஸ்லிம்கள் பற்றி சிந்திக்காமலேயே ஐ.தே.க. தலைவராக இருந்த ஜே.ஆர். ஜயவர்தன இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். வடக்கையும் கிழக்கையும் இணைத்து முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்.

ஐ.தே.க. ஆட்சியில் தான் முஸ்லிம்கள் காத்தான்குடியில், ஏறாவூரில், பொலன்னறுவையில் படுமோசமாகக் கொல்லப்பட்டனர். வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டனர். ஓரிரு மணி நேரத்தில் முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றியபோது முஸ்லிம்களுக்கு உதவ ஐ.தே.க. அரசு எதையும் செய்யவில்லை. வாகன வசதி கூட அளிக்கவில்லை. முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் வயோதிபர்களும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து கால் கடுக்க நடந்து தென்பகுதிக்கு வந்து சேர்ந்தனர். கடந்த 18 வருடகாலமாக அவர்கள் அகதி முகாம்களிலேயே அகதி அந்தஸ்து கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்காவின் செயல்களை சர்வதேச அரங்கில் ஆதரித்துப் பேசிய ஒரே ஒருவர் இலங்கைப் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவே. பௌத்த பிக்குகள் மத்தியில் இனவாதமாகப் பேசியவரும் ரணில் விக்கிரமசிங்க தான். ஈரான் ஜனாதிபதி இலங்கை வந்தபோது ஷீயா, ஸுன்னி பிரச்சினையை உருவாக்கும் நோக்கில் விஷமமாக பேசியவரும் ரணில் விக்கிரமசிங்க தான்.

உண்மைகள் இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஐ.தே.க.வில் போட்டியிட்டதை என்னவென்று கூறுவது? முஸ்லிம்களுக்கென்று தனிக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்ப எந்த கிழக்கு மண் உதவியதோ அந்த மண்ணில் முஸ்லிம் கட்சியை ஒதுக்கிவிட்டு ஐ.தே.க.வில் தேர்தலில் போட்டியிட ரவூப் ஹக்கீம் சுயபுத்தியுடன்தான் தீர்மானித்தாரா?

ரவூப் ஹக்கீம் ஐ.தே.க.வில் சங்கமமாகியதும் மு.கா.விலிருந்து விலகிய ஹிஸ்புல்லாஹ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவுடன் கிழக்கில் போட்டியிட்டார். அரசில் அங்கம் வகித்த அனைத்து முஸ்லிம் அமைப்புகளும் ஹிஸ்புல்லாஹ்வை முழுமனதுடன் ஆதரித்தன. முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பிரமுகர்கள் கிழக்கு மாகாணம் தோறும் சென்று ஹிஸ்புல்லாஹ்வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தனர். ஹிஸ்புல்லா கூடுதல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றால் முதலமைச்சர் அவரே என்று அரச மேல்மட்டமும் கூறியது. எனவே, முதலமைச்சரைப் பெற்றுக் கொள்ளும் ஒரே நோக்கத்திலேயே முஸ்லிம் அமைச்சர்களும் மற்றவர்களும் ஹிஸ்புல்லாவுக்காக இரவு பகலாக உழைத்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொன்னதை செய்வார் என்ற நம்பிக்கை முஸ்லிம்களிடம் இருந்தது. எனவே, தேர்தல் முடிவுகள் வெளியானதும் ஹிஸ்புல்லாஹ்தான் முதலமைச்சர் என நம்பினர். மகிழ்ச்சி கொண்டனர். ஆனால், அரச மேல் மட்டம் முஸ்லிம்களை ஏமாற்றியது. அவர்களது நம்பிக்கையை சிதறடித்தது. பிள்ளையானை முதலமைச்சராக்கும் நோக்கில் நயவஞ்சகமாகச் செயல்பட்டது.

முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூடிப் பேசி ஹிஸ்புல்லாஹ்வை முதலமைச்சராக்குமாறு விடுத்த கோரிக்கையும் மதிக்கப்படவில்லை நிராகரிக்கப்பட்டது.

மு.கா.விலிருந்து பிரிந்து வந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டபோது அரச தரப்பினால் பாராட்டிக் கட்டித் தழுவி தலைமேல் வைத்து கொண்டாடப்பட்ட ஹிஸ்புல்லா, தேர்தல் முடிந்ததும் வேண்டாதவராகி விட்டார். அரச தரப்பு ஊடகங்கள் ஹிஸ்புல்லாஹ்வை மட்டுமல்ல லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பையும் வம்புக்கிழுத்து ஏளனம் செய்தன.

தமிழ், ஆங்கில தனியார் ஊடகங்களும் ஹிஸ்புல்லாஹ் முதலமைச்சராவதை ஆதரிக்காத விதத்தில் செய்திகளை வெளியிட்டன.

கறிச்சுவைக்கு பயன்படும் கறிவேப்பிலை பின்னர் தூக்கி எறியப்படுவதுபோல் முஸ்லிம்களையும் தேர்தலில் பயன்படுத்திவிட்டு தூக்கியெறிந்து விட்டனர்.

முஸ்லிம்கள் தரப்பில் உள்ள நீதி நியாயத்தை சுட்டிக்காட்டி முஸ்லிம்களுக்காக நேர்மையாக வாதாட எந்த ஒரு பேரின, சிறுபான்மையினத்தவரும் முன்வரவில்லை.

நீதி நியாயத்தைப் பேசிய முஸ்லிம்கள் இனவாதிகளாக சித்தரிக்கப்பட்டார்கள். கண்டிக்கப்பட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு நீதி நியாயமும் உரிமையும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டுமென்றால் அவர்கள் சகல பேதங்களையும் மறந்து ஒன்றுபடவேண்டும். அவர்கள் உறுதியான ஒரு சக்தியாக மாறினால் மட்டுமே எதிர்காலம் பாதுகாப்பானதாக இருக்கும்.